உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத்தின்
திங்கள் தமிழ்த்தாள்

மலர் நாற்பது

1967

பத்திராசிரியர்: மு. அருணசலம், எம். ஏ.,

உதவிப் பத்திராசிரியர்: அம்பை. இரா. சங்கரன்

சைவ சித்தாந்த மகா சமாஜம்,

12, கீழ மாட வீதி,

மயிலாப்பூர், :: சென்னை-4.

உள்ளுறை

பொருள்	கட்டுரையாளர்	பக்க எண்
அம்பலவாணர் அருள்	தா. சுப்பிரமணியம்	112
அரசு வள்ளல் ஆளுடைய பிள்ளையார்	மா. ப. தியாகராசன்	85
அறப்பள்ளீச்சுரர் கோயில்	காலாயுதக் கொடியோன்	81
ஆகாயம்	மா. ப. தியாகராசன்	218
ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள்	பெயர்விழையான்	226
ஆலால சுந்தரஞ் செட்டியார் மணிவிழா வாழ்த்து	ச. நடேச முதலியார்	349
ஆற்றூர்	மு. அ.	212
இந்து அறிஞர் மாநாடு	துணையாசிரியர்	43
உடற் கூறு	மா. ப. தியாகராசன்	337
உளக்கோயில்	சி. குமரேசப் பிள்ளை	299
உற்பத்திக் கிரமம்	மா. ப. தியாகராசன்	197
என் ஆசிரியர்	வெங்கடேசன்	255
என் குருநாதர்	ச. நடேச முதலியார்	240
ஏதுங் குறைவிலார்	ஆசிரியர்	137
ஐம்பூதங்களும் ஐம்புலன்களும்	மா. ப. தியாகராசன்	288
ஒலி பரப்பு	ஆசிரியர்	9, 41
ஓர் உண்மைத்திருத்தம்	ர. ச. கங்காதரனூர்	284
ஓர் ஐய வினு	க. சோமசுந்தரஞ் செட்டியார்	29
கடைமுடி (கீழூர்)	மு. அ.	109
காளுட்டு முள்ளூர்	மு. அ.	174
கோகழி பற்றிய சிந்தனை	சி. சுப்பிரமணிய தேசிகர்	53
சச்சிதானந்தம் பிள்ளை அரும் பண்புகள்	வை. குஞ்சிதபாதம்	264
சச்சிதானந்தம் பிள்ளை 80-ஆண்டு நிறைவு	ஆசிரியர்	233
சச்சிதானந்தத்தைப் போற்றுதார் யாரே?	இரா. கோவிந்தராஜன்	252

சமயப் புரவலர் இருவர் மறைவு அம்பை சங்கரனார் 123
சமய வாழ்க்கை இங்கும் அங்கும்
மு. அருணாசலம் 64
சமாஜ ஆண்டு விழா ஆசிரியர் 1
சமாஜ ஆண்டு விழா தலைமையுரை (அனுபந்தம்)
ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள்
சமாஜ 61–ஆம் ஆண்டு விழா
வரவேற்புரை G. வரதராஜப் பிள்ளை 11
சமாஜ 61–ஆம் ஆண்டறிக்கை (அனுபந்தம்)
செயலாளர்
சமாஜச் செய்திகள் 84
சமாஜத்தின் பங்கு யாது? சோதிகுமார் 351
சமாஜத் தேர்வு 224
சமாஜப் பணியாளர்கள் 164
சிதம்பரநாதன் செட்டியார் மறைவு
துணையாசிரியர் 356
சிவப்பிரகாச உரை ஆசிரியர் 105
சிவப்பிரகாசமும் உரைகளும் ஆசிரியர் 201
சுவையான செய்திகள் சில கீ. இராமலிங்கம் 178
சூத சங்கிதை ஆசிரியர் 281
சைவ சித்தாந்தி யார்? க. சோமசுந்தரஞ் செட்டியார் 59
சைவம் தழைக்க க. சாம்பசிவன் 291
சைவத்தின் தொன்மை N. சரசுவதி 62
சைவப் பெரியார் துணையாசிரியர் 259
சைவப் பெரியாரைப் பற்றிய
சிந்தனைகள் கொ. நீ. சிங்காரவேலு 247
தமிழ்த் தெய்வ வாழ்த்து ஞானியார் சுவாமிகள் 24
திருஓமாம்புலியூர் மு. அ. 144
திருக்குறள் போதுமா? கொ. நீ. சிங்காரவேலு 354
திருச்சியில் சமாஜ 61–ஆவது
ஆண்டு விழா அம்பை சங்கரனார் 3
திருப்புகழ் மணி மு. அ. 26

திருப்புறம்பயம்	மு. அ.	19
திருப்போரூர்ச் சந்நிதி முறை	அம்பை சங்கரனுர்	339
திருமந்திரம் அரிய உரை	,,	228, 308
திருவருட் பயன்	தா. ஐ. ஏசுதாசு	322
திருவெம்பாவை	இரா. கோவிந்தராஜப் பிள்ளை	126, 157
தூபம் மறந்தறியேன்	ஆசிரியர்	345
தொல்காப்பியரும் சமயாச்சாரியர்களும்	அ. தா. ப. திருஞானசம்பந்தன்	327
நன்னெறி காத்த நாதனுர்	சி. குமரேசப் பிள்ளை	150, 187
நிறை பெருங் கருணை	பு. மா. ஜயசெந்தில்நாதன்	90
பத்ததிகள்	ஆசிரியர்	73
பரவச நிலை	மு. அருணுசலம்	221
பழந்தமிழர் சமய நிலை	N. சரசுவதி	94
பழியோரிடம் பாவமோரிடம்	அம்பை சங்கரனுர்	119
பழைய மாயூரப் புராணம்	ஆசிரியர்	313
புறவார் பனங்காட்டூர்	வை. பாலசுப்பிரமணியம்	320
பெரியோர் பாராட்டுரைகள்		265
மகாராஜத் துறவு	நல். முருகேச முதலியார்	306
மணிவிழா	அம்பை	344
மதிப்புரை	அம்பை	31, 70, 101, 135, 231, 342, 358
,,	ஆசிரியர்	125, 200
,,	மு. அ.	231
,,	கொ. நீ. சி.	232
மாசிலாமணி முதலியார் மறைவு	ஆசிரியர்	122
மாநாட்டு வரவு செலவுக் கணக்கு		37
மெய்கண்டாரும் மனவாசகங் கடந்தாரும்	ஆசிரியர்	169
மெய்ப் பொருளாளர் மறைவு	அம்பை	210
மெய்யுணர்வு	பரணி	215
யான் கண்ட சான்ருேர்	பூ. ஆலால சுந்தரன்	261
யான் கண்ட பெரியார்	சி. குமரேசப் பிள்ளை	257
வழுவூர் வீரட்டம்	மு. அ.	46
வார வழிபாட்டுத் தந்தை	G. கலியாணம்	244

Registered No. M. 2330 "SIDDHANTHAM"
Vol. 40—No. 1

சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

40	பராபவ தை 1967 ஜனவரி	இதழ்

உள்ளுறை

	பக்கம்
சமாஜ ஆண்டுவிழா ...	1
திருச்சியில் சமாஜ 61 ஆவது ஆண்டுவிழா ...	8
சமாஜ 61 ஆவது ஆண்டுவிழா தலைமையுரை—அநுபந்தம் ...	1—

பத்திராசிரியர்: மு. அருணைசலம், எம். ஏ.,
துணைப் பத்திராசிரியர்: வித்துவான் அம்பை. இரா. சங்கரன்
சைவ சித்தாந்த மகா சமாஜம்,
12, கிழக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை-4.

சமாஜச் செயற்குழுக் கூட்ட அறிவிப்பு

29-1-67 ஞாயிறன்று காலை 9-30 மணிக்கு சமாஜ அலுவலகத்தில் செயற்குழுக் கூட்டம் நிகழும். மாதக் கணக்கு சரிபார்த்தல், பிற இன்றியமையாப் பொருள்கள் பற்றிய முடிவுகள் தீர்மானிக்கப் பெறும். உறுப்பினர்கள் யாவரும் தவறாது வருமாறு கேட்டுக் கொள்ளப் பெறுகிறார்கள்

(செயலாளர்)

159836

தை மாத விசேட தினங்கள்

R673ᵐ211,N28 31K7

5	(18—1—67)	கலிக்கம்ப நாயனார் விழா.
10	(23—1—67)	கண்ணப்ப நாயனார் விழா.
11	(24—1—67)	அரிவாட்டாய நாயனார் விழா.
13	(26—1—67)	தைப்பூச விழா.
17	(30—1—67)	சண்டேசுவர நாயனார் விழா.
,,	,,	திலகவதியம்மையார் விழா.
20	(2—2—67)	திருநீலகண்ட நாயனார் விழா.
,,	,,	தாயுமான சுவாமிகள் விழா.
29	(11—2—67)	அப்பூதியடிகள் நாயனார் விழா.

பிற செய்திகள்

கிழக்குத் தாம்பரம் ஸ்ரீ கற்பக விநாயகர் பக்தஜன சபை சார்பில் 12-12-66ல் சித்தாந்த வித்தகர் கயப்பாக்கம் திரு. சோம சுந்தரஞ் செட்டியார் அவர்கள் "சோம வார விரத மகிமை" பற்றிச் சொற்பொழிவாற்றினார்கள்.

Reg. M. 2330

உ

சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

மலர் 40	பராபவ தை 1967 ஜனவரி	இதழ் 1

சமாஜ ஆண்டு விழா

(ஆசிரியர்)

சைவசித்தாந்த மகா சமாஜத்தின் 61-ஆம் ஆண்டு விழா முன்னேற்பாடு செய்தபடி மிகவும் சிறப்பான முறையில் தாயான செல்வன் எழுந்தருளியுள்ள திருச்சிராப்பள்ளியில் நடைபெற்றது. விசாலமான இட அமைப்புடைய நகராட்சி மண்டபமாகிய தேவர் மன்றத்தில், மூன்று நாட்களும் சிராப்பள்ளி மக்கள் பெருந்திரளாகக்குழுமி, சமாஜ மகா நாட்டை வெற்றி பெறச் செய்தார்கள். வரவேற்புக் குழுவினர் அனைவரும் மிக்க உள்ளன்போடு மகாநாடு வெற்றிபெறப் பலநாட்கள் உழைத்தமை போற்றத்தக்கது; சிறப்பாக தலைவர் கு. வரதராஜப் பிள்ளை, செயலாளர் சொ. கிருஷ்ணன் ஆகியோர் பெருந் தொண்டைப் போற்ற வேண்டும்.

சமாஜஅங்கத்தினர்கள் மலையிலுள்ள மௌனமடத்தில் தங்க ஏற்பாடாகியிருந்தமையால், சிராப்பள்ளிக் குன்றுடைய தாயுமான எம்பெருமானை வழிபடும் வாய்ப்பும் பெற்றார்கள்.

காஞ்சி ஞானப் பிரகாசராதீனத்துக் குருமகா சந்நிதானமும், அவர்கள் " எங்கள் பரமாசாரிய சுவாமிகள்" என்று குறிப்பிட்ட சூரியனூர் கோவிலாதீன மகாசந்நிதானமாயிருந்த ஸ்ரீ.மீனாட்சிசுந்தர தேசிக சுவாமிகளும் கலந்து கொண்டது மகாநாட்டுக்குப் பெருஞ்சிறப்பு.

திருச்சிராப்பள்ளிப் பிரமுகர்களான தி. மு. நாராயணசாமிப் பிள்ளை, கி. ஆ. பெ. விசுவநாதம் ஆகியோர் விழாவில் பங்குகொண்டது போற்றற்பாலது. விழாவில் நூல் வெளியீடு சிறப்பான அங்கமாயிருந்தது. ஸ்ரீ மீனாட்சி சுந்தர தேசிகர் அவர்கள் தாம் செய்த இறைஞானபோதம் என்ற நூலை வெளியிட்டுப் பேசினார்கள். இந்நூல் சிவஞான போதத்துக்கு விளக்கமாக சூத்திர யாப்பில் செய்யப்பெற்ற சிறு நூல்; உரையோடு கூடியது. வச்சிரவேல் முதலியாரவர்கள் செய்த திருவுந்தியார் விளக்கவுரையும், பட்டுச்சாமி ஓதுவாரவர்கள் செய்த சைவானுட்டான விளக்கமும் சமாஜச் செயலாளரால் சொந்தச் செலவில் அச்சிட்டு வெளியிடப் பெற்றன.

இசையரங்கின் பின், தென் ஆப்பிரிக்கா, மலாயா நாடுகளில் சைவப் பிரசாரம் செய்து திரும்பிய கே. எம். பாலசுப்பிரமணியம் அவர்களை வாழ்த்தும் முறையில் ஒரு பாராட்டு விழா நடைபெற்றது. இளைஞர் மகாநாட்டில் இராமநாதபுரம் காசிநாத துரை அவர்கள் தலைமை வகித்துப் பேசியதும், அமெரிக்காவிலிருந்து வந்து சென்னைப் பல்கலைக் கழகத்தில் பயில்கின்ற ஜான்கிரேஸ் என்ற இளைஞர் "சைவ சித்தாந்தத்தில் உயிரின் தன்முனைப்பு" என்ற பொருள் பற்றி ஆங்கிலத்தில் பேசியதும் சிறப்புற அமைந்திருந்தன.

இம்மகா நாட்டில் பல வகையிலும் பங்கு கொண்டோர் அனைவருக்கும் சமாஜத்தின் நன்றியும் வாழ்த்தும் உரியன.

திருச்சியில் சமாஜ 61 ஆவது ஆண்டு விழா

(அம்பை சங்கரனார்)

தமிழ் நாட்டில் நடுநாயகமாயுள்ளதும் சம்பந்த மூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார் முதலியபெரு மக்களால் போற்றிப் புகழப் பெற்றதும் எல்லார்க்குந் தாயாய ஈசன் நன்றுடையானாயருள் சுரக்கும் பெருமை பெற்றதும் திருச்சிராப்பள்ளி நகரமேயாகும். இப்பதியின் கண் 1909ஆம் ஆண்டு சர். எ. கனகசபை அவர்கள் தலைமையில் சமாஜ நான்காம் ஆண்டு விழாவும் 1941ஆம் ஆண்டு அருள்திரு. ஞானியார் அடிகள் தலைமையில் சமாஜ முப்பத்தாறுவது ஆண்டு விழாவும் சிறப்பாக நிகழ்ந்தன. 25 ஆண்டுகளுக்குப் பின்னர் 30–12–66, 31–12–66, 1–1–67 ஆகிய மூன்று நாட்களிலும் சமாஜத்தின் 61ஆம் ஆண்டு நிறைவு விழாவும் சைவர், சைவ இளைஞர் மாநாடுகளும் மிகச் சிறப்புற நிகழ்ந்தன.

முதல் நாள் (30–12–66 வெள்ளிக்கிழமை)

திருச்சி தமிழ் நாட்டின் நடுநாயகமாயிருப்பதால் பல பக்கங்களிலுமிருந்து சமாஜ உறுப்பினர்களும் பிறபேரன்பர்களும் வந்து கலந்து கொள்வதற்கு வாய்ப்பாயிருந்தது. பல மாவட்டங்களிலுமிருந்து பல பெரியார்கள் வந்திருந்தனர். காலை 7 மணிக்கு சமாஜத் தலைவர், செயலாளர், பிற உறுப்பினர்களுடன் தாயுமானவரையும் மட்டுவார் குழலம்மையையும் உச்சிப் பிள்ளையாரையும் வழி பட்டு அருள் பெற்றனர். எல்லாத் திருக்கோயில்களிலும் தேவத்தான ஓதுவார் திருமுறைப் பாடல்களை ஓதி திருவருள் எண்ணத்தில் அன்பர்களைத்தோயச் செய்தார். காலைச் சிற்றுண்டிக்குப் பின்னர் 9 மணிக்குத் திருச்சி மலைக் கோட்டை தருமபுர ஆதீனமௌன மடத்திலிருந்து தலைவர் முதலியோர் ஊர்வலமாக மாநாடு நிகழவிருக்கும் தேவர் மன்றத்திற்கு அழைத்துச் செல்லப் பெற்றனர். சிவ

புராணப் படனத்துடன் அடியார்கள் புடை சூழ தலைவர் அருள்திரு. ஞானப்பிரகாச சுவாமிகளும் ஆசியுரை வழங்க சூரியனார் கோயில் ஆதீனத்து அருள்திரு. மீனாட்சிசுந்தர தேசிக சுவாமிகள் அவர்களும் தருமையாதீன ஒடுக்கம் அருள் திரு. சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகளும்பவனி வந்தகாட்சி மக்களைமிகப்பரவசப்படுத்திற்று. அங்கங்கு தோரணங்கள், வளைவுகள் மாநாட்டுச்சிறப்பை இன்னும் மேன்மையுறச் செய்தன. மேளவாத்தியமும் அரநாம முழக்கங்களும் சிறக்க ஊர்வலம் தேவர் மன்றத்தைப் போய்ச் சேர்ந்தது. திருச்சி தமிழ் மொழிக் காவலர், திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் தேவர் மன்ற முன் பக்கலுள்ள இடபக் கொடியையேற்றினார்கள். தேவர் மன்ற மேடையில் மெய்கண்டார் திருவுருவப் படமும் கூத்தப் பெருமான் திருவுருவப் படமும் மின் விளக்கு அலங்காரங்களுடன் நன்கு காட்சியளித்தன.

இறை வணக்கத்துடன் காலை 9–30 மணிக்கு மாநாடு தொடங்கியது. காஞ்சிபுரம் தொண்டை மண்டலம் ஸ்ரீ. ஞானப்பிரகாசதேசிக சுவாமிகள் ஆதினம் குருமகா சந்நிதானம் தவத்திரு. ஞானப்பிரகாசதேசிக பரமாசாரிய சுவாமிகள் மாநாட்டிற்குத் தலைமை வகித்தார்கள். மாநாட்டு வரவேற்புக் குழுத்தலைவர் திருக்குறள்வேள் திரு. குரு. வரதராஜப் பிள்ளை அவர்கள் பி. ஏ. வரவேற்புரை ஆற்றினார்கள். (அது அடுத்த இதழில் வரும்) பின்னர் கொடியேற்றிய பெரியார் திரு. கி, ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் கொடியேற்றுரையாற்றினார்கள். தருமையாதீனம் தவத்திரு. வித்துவான் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் மாநாட்டைத் திறந்து வைத்துப் பேருரையாற்றினார்கள். தருமை மகா சந்நிதானம் அவர்களின் ஆசியுரையையும் வழங்கினார்கள். தவத்திரு. மீனாட்சிசுந்தர தேசிக சுவாமிகளும் ஆசியுரையை வழங்கியருளினார்கள்.

திருச்சி திவான்பகதூர் தி. மு. நாராயணசாமிப் பிள்ளை பி. ஏ., பி. எல். அவர்கள் அருள் திரு. மீனாட்சி சுந்தரதேசிக பரமாசாரிய சுவாமிகள் இயற்றிய இறை ஞானபோதம் திரு. குரு. வரதராஜப் பிள்ளை எழுதிய

உரையுடன் கூடிய நூலையும், காஞ்சிபுரம் திரு. க. வச்சிரவேல் முதலியார் அவர்கள் எழுதிய திருவுந்தியார் உரை என்னும் நூலையும், சைவானுட்டான விளக்கம் என்னும் நூலையும் வெளியிட்டார்கள். இவற்றுள் இறை ஞானபோதம் சமாஜ வரவேற்புக் குழுவினர் சார்பிலும் பின்னிரண்டு நூல்கள் சமாஜச் செயலாளர் திரு. தி. கி. நாராயணசாமி நாயுடு அவர்கள் சொந்தச் சார்பிலும் வெளியிடப் பெற்றன. வரவேற்புக் குழு அமைச்சர் திரு. சொ. கிருஷ்ணன் அவர்கள் தலைவருக்கு வரவேற்பிதழை வாசித்தளித்தார்கள். இறுதியாக மாநாட்டுத் தலைவர் அருள்திரு. சுவாமிகள் தங்கள் தலைமையுரையையாற்றி ஞர்கள். (அதனை இவ்விதழில் பிறிதோரிடத்தில் காண்க.) முற்பகல் நிகழ்ச்சி 1 மணிக்கு முடிவுற்றது.

அன்று பிற்பகல் 4 மணிக்கு மீண்டும் மாநாடு கூடியது இறை வணக்கம், தலைவர் முன்னுரை முறையே நிகழ்ந் தன. சித்தாந்த ஆசிரியர் திரு. மு. அருணாசலம் எம். ஏ., 'சம்பந்தர் திருவுள்ளம்' என்பது பற்றியும் அருள் திரு. தற்புருஷ தேசிகர் (தேவகோட்டை) "சைவர் யார்?" என்பதுபற்றியும் திரு. கீ. இராமலிங்க முதலியார் எம். ஏ, "சுந்தரர் செந்தமிழ்" என்பது பற்றியும் இசைப் புலவர் குடந்தை திரு. ப. சுந்தரேசம் பிள்ளை "செம்பாலை-திருத் தாண்டகம்" என்பது பற்றியும் மிகச் சிறப்புறப் பேசினர். தலைவர் முடிப்புரை, இறை வாழ்த்துடன் முதல் நாள் நிகழ்ச்சிகள் இனிது முடிந்தன.

இரண்டாம் நாள்

31-12-66 சனிக்கிழமை காலையில் மாநாட்டிற்கு வந்திருந்தோர் திருவரங்கம், திருவானைக்கா, வயலூர் முதலிய திருத்தலங்களுக்குச் சென்று வழிபாடாற்றினர். காலை 9 மணிக்குமேல் சமாஜ உறுப்பினர் ஆண்டுப் பொதுக் கூட்டம் மௌன மடத்தில் நிகழ்ந்தது. சமாஜத் தலைவர் திரு. கோ. மு. முத்துசாமிபிள்ளையவர்கள் தலைமை யில் காலஞ் சென்ற பெரியார் மலேயா திரு. கா.

இராமநாதன் செட்டியார் அவர்கள் மறைவு குறித்து ஒரு இரங்கல் தீர்மானம் நிறைவேறியது. சமாஜச் செயலாளர் திரு. தி. கி. நாராயணசாமி நாயுடு அவர்கள் ஆண்டு அறிக்கையையும் வரவு செலவுக் கணக்குகளையும் படித்தார்கள். இறுதியாக 1967ஆம் ஆண்டுக்குரிய சமாஜ அலுவலர் தேர்தல் நிகழ்ந்தது. சமாஜப் பொதுக் கூட்ட உறுப்பினர்கள் சமாஜ வளர்ச்சி கருதி மிகவும் கலந்து பேச இப் பொதுக்கூட்டத்திற்கு அதிக நேரம் இவ்யாண்டு ஒதுக்கியமை மிகவும் வாய்ப்பாயிருந்தது.

அன்று பிற்பகல் 4 மணிக்கு சைவர் மாநாடு கூடியது. இறைவணக்கம், தலைவர் முன்னுரைக்குப்பின் திருச்சி திரு இராதா கிருஷ்ணன் எம். ஏ. "பெரிய புராணத்தில் மனை வாழ்க்கை" என்பது பற்றியும், தாம்பரம் திரு. பூ. ஆலால சுந்தரஞ் செட்டியார் எம். ஏ. "அப்பர் தேவாரத்தில் இலக்கியச் சுவை" என்பது பற்றியும், அண்ணாமலை நகர் வித்துவான் திரு க. வெள்ளைவாரணனார் "திருமுறைகளும் சைவசித்தாந்தக் கருத்துக்களும்' என்பது பற்றியும், காஞ்சிபுரம் திரு. க. வச்சிரவேல் முதலியார் பி.ஏ., எல்.டி., "திருவுந்தியார்" என்பது பற்றியும் மிகச் செம்மையுற விரிவுரையாற்றினார்கள். இரவு 8-30 மணிக்கு இரண்டாம் நாள் நிகழ்ச்சி இறைவாழ்த்துடன் இனிது முடிந்தது.

மூன்றும் நாள்

1-1-67 ஞாயிற்றுக்கிழமை காலை சமாஜ உறுப்பினர்சிலர் திருவெறும்பூர் முதலிய தலங்களுக்குச் சென்று வழிபாடாற்றினர்.

காலை 9 மணிக்கு அண்ணாமலைப் பல்கலைக் கழகத் திருமுறையாசிரியர் திரு. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் தக்க இன்னிசைக் கருவிகளுடன் திருமுறையிசையரங்கு முதலில் நிகழ்த்தினார்கள். பின்னர் 10 மணிக்கு திரு. காசிநாததுரை அவர்கள் தலைமையில் தென்னாப்

ரிக்கா, மலேசியா முதலிய நாடுகளில் சென்று தமிழையும் சைவத்தையும் நன்முறையில் பரப்பி வந்த திருவாசகமணி கே. எம். பாலசுப்பிரமணியம் பி. ஏ., பி. எல். அவர்களுக்குப் பாராட்டுக் கூட்டம் நிகழ்ந்தது. வரவேற்புக் குழுத் தலைவர் திருவாசகமணி அவர்களுக்கு ஒரு பாராட்டிதழை வாசித்தளித்து அவர்களைப் பாராட்டிப் பேசினார்கள். அருள் திரு வித்துவான் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்களும் சமாஜத் தலைவர் கோ. மு. முத்துசாமிப் பிள்ளையவர்களும் திருவாசகமணியின் அரும் பேராற்றல்களைப் பாராட்டிப் பேசினர். தலைவர் திரு. காசிநாததுரையவர்கள் பொன்னுடை போர்த்தியதுடன் பாராட்டு விழாக்குரியவரின் தொண்டுள்ளம், சிறப்பு, அழுத்தமானபக்தி முதலியவற்றைக் குறித்து விளக்கிப் பேசினார்கள். பிறகு திருவாசகமணியவர்கள் மேல் நாடுகளில் தமிழர்களின் நிலைபற்றியும் அங்குச் சமயம் பரப்ப வேண்டிய இன்றியமையா நிலை பற்றியும் மிகவும் அழகாக எடுத்துக் கூறினார்கள். பின் திருவெம்பாவை பற்றியும் சில அரிய கருத்துக்களைப் பேசி முடித்தார்கள். தலைவர் முடிப்புரையுடன் பகல் 1 மணிக்கு காலை நிகழ்ச்சி முடிந்தது.

பிற்பகல் 4 மணிக்குச் சைவ இளைஞர் மாநாடு திரு. காசிநாததுரையவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. வரவேற்புக் குழு அமைச்சர் திரு. தி. சு. சிவப்பிரகாசம் அவர்கள் வரவேற்பிதழை வாசித்தளித்தார்கள். திரு. கோ. மு. முத்துசாமிப் பிள்ளையவர்கள் வரவேற்புரை கூறிய பின் தலைவர் அவர்கள் தலைமையுரையைச் சிறப்புற ஆற்றினார்கள். பிறகு இலஞ்சி திரு. அ. இ. முத்துக்குமாரசாமி "அப்பர் அருள் வாக்கு" என்பது பற்றியும், திருப்பனந்தாள் வித்துவான் திரு. கு. சுந்தரமூர்த்தி 'சாத்திரங்களின் சுவை நலம்' என்பது பற்றியும், திருச்சி திரு. ஆதி முருகவேள் எம். ஏ. 'அருட்பயன்' என்பது பற்றியும், சென்னை திரு. ந. ரா. முருகவேள் எம். ஏ. எம். ஓ. எல். "நந்தி உரைத்தருளும் ஞான நூல்" என்பது பற்றியும், வித்துவான் திரு. அருணைவடிவேல் முதலியார் "சிவப்பிரகாசத்தில் திருமுறைக் கருத்துக்கள்" என்பது பற்றியும் திரு. ஜான் கிரேஸ் (U S. A.)

Human will in Saiva Siddhantha என்பது பற்றி ஆங்கிலத்திலும் பேசினார்கள். ஆங்கிலப் பேச்சை சித்தாந்த ஆசிரியர் திரு. மு. அருணாசலம் எம். ஏ. மொழி பெயர்த்தார்கள், தலைவர் முடிவுரைக்குப் பின் சமாஜச் செயலாளர், வரவேற்பாளர் நன்றியுரை கூறினர். இறை வாழ்த்துடன் இவ்யாண்டுக்குரிய ஆண்டுவிழாவும் மாநாடுகளும் சிறப்புற நிறைவெய்தின.

இந்த ஆண்டு மாநாட்டில் வரவேற்புக் குழுவினர் மிக ஆர்வங் காட்டியும் சில அசந்தர்ப்பங்களால் சைவ மாதர் மாநாடு நடக்கவில்லை. சைவத்திற்கு உழைத்த பெரியாராய திருவாசகமணி யவர்களின் பாராட்டு விழா ஒரு சிறப்பு நிகழ்ச்சியாகும். காசிப் பல் கலைக் கழகச் சித்தாந்தப் பேராசிரியர் திரு. சிவராமன் அவர்களும், அமெரிக்க நாட்டிலிருந்து வந்துள்ள திரு. ஜான் கிரேஸ் ஆகியோர்களும் மாநாட்டில் கலந்து கொண்டது மிகவும் மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

இம்மாநாட்டிற்கு வந்திருந்தோர் தங்க எல்லா வசதிகளும் செய்து தந்த தருமையாதீனத்தாருக்கும் வழிபாட்டுக்கு நன்முறையில் உதவிய தாயுமானவர் திருக்கோயில் நிர்வாகிகளுக்கும் மற்றும் வரவேற்புக் குழுவினர் எல்லோருக்கும் சமாஜம் நன்றி செலுத்தும் கடப்பாடு உடையது. சிறப்பாக வரவேற்புக் குழுத் தலைவர் திருக்குறள் வேள் திரு. குரு. வரதராசப் பிள்ளையவர்கள் இம்மாநாடு வெற்றிகரமாக நிகழ எடுத்துக் கொண்ட முயற்சி கூறுந் தரமன்று. தலைவருக்குத் தக்க செயலாளர்களாய் திரு. சொ. கிருஷ்ணன் அவர்களும் திரு தி, சு. சிவப்பிரகாசம் அவர்களும் வாய்த்தது மிகவும் போற்றத்தக்க வாய்ப்பாகும். திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் இடை இடையே நம் சமாஜப் பணி சிறக்கப் பல்லாற்ருனும் உதவினார்கள். இம்மாநாடு சிறக்க உதவிய பெருமக்கள் யாவருக்கும் நன்றுடையான் அருள் என்று மிருந்து இன்பம்தர அவனிணையடிகளையே வாழ்த்தி வணங்குகின்ரேம்.

" மேன்மை கொள் சைவ நீதி
விளங்குக உலகமெல்லாம். "

உ
சிவமயம்
திருவம்பலம் உடையார் துணை

சென்னைச் சைவ சித்தாந்த மகா சமாஜத்தின்
61 - ஆம் ஆண்டு விழா, திருச்சிராப்பள்ளி

காஞ்சி-தொண்டை மண்டலாதீன குருமகா சந்நிதானம்
சீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்
அவர்கள
நிகழ்த்தியருளிய

தலைமைப்பேருரை
(30—12—1966)

திருச்சிற்றம்பலம்

" நன்றுடையானைத் தீயதிலானை நரைவெள்ளே
றொன்றுடையானை யுமையொருபாக முடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறவென்னுள்ளங் குளிருமே "

" சைவம் சிவனுடன் சம்பந்தம் ஆகுதல்
சைவம் தனைஅறிந்தே சிவன்பாற் சார்தல்
சைவம் பசு,பாசம் சாராமல் நீங்குதல்
சைவம் சிவாநந்த சாயுச்சியம் ஆமே "

திருவே அருட்செல்வமே அன்பர்உன்னுஞ் செழுங்கருணை
யுருவே என்ஆருயிர்க் கோருயிரே•ஒழியாதபவத்
தொருவேன் புகுந்துநின் றெய்த்தேற்கிரங்கிடெம் உத்தமனே
தெரிவே எழிற்கச்சி ஞானப்ரகாச மெய்த் தேசிகனே.

திருச்சிற்றம்பலம்

சைவ சித்தாந்தம் என்பது சைவமாகிய முடிந்த முடிபு என்ற பொருள் உடையது. சைவம் என்றது இங்கு அறுவகைச் சமயத்திற்கும் மேலாகித் தனிச் சிறப்புடைய சமயாதீதத்தைக் குறிப்பது.

'சித்தாந்த சைவம்' என்றும் 'சைவ சித்தாந்தம்' என்றும் வழங்குவதன் உண்மையை முதலில் உளங் கொண்டு அதன் சிறப்புணர்தல் கடன். இவ்வுண்மையை இத்திருச்சிராப்பள்ளியிலே சிவஞான சித்தி நெறியிலே ஒழுகி வீடு உற்ற மௌந குருவின்பால் சிவஞானோப தேசம் பெற்ற தாயுமானவர் அருளிய பாடல்களால் எளிதின் அறியலாம்.

[1]"ஐவகையெனும் பூதம் ஆதியை வகுத்து,[2] அதனுள்
அசர சரபேதம் ஆன
யாவையும், வகுத்து[3] நல்லறிவையும் வகுத்து [4]மறை
ஆதி நூலையும் வகுத்துச
[5]சைவம் முதலாம் அளவு இல் சமயமும் வகுத்து [6]மேற்
சமயங்கடந்த மோன
சமரசம் வகுத்தநீ உன்னை யான் அணுகவும்
தண்ணருள் வகுக்க இலையோ?"

(சின்மயாநந்தகுரு 4)

என்ற இத் திருவிருத்தத்திலே ஆறுவதாகக் குறித்ததே சைவ சித்தாந்தம். இதையே 'மதாதீதமான அருள் மரபு வாழி' என்று ஆகார புவனத்தின் முடிவில் வாழ்த்தினர். திருநாவுக்கரசு நாயனர் 'ஐயஞ்சின் அப்புறத்தான்' என்றருளியதும் அச்சமயங் கடந்த மோனத்தையே யாம். இங்குத் தாயுமானவர் அருளிய ஆறுவகையையும் சுருக்கமாகவேனும் உணர்வது நல்லது.

1. முதலாவது: ஐவகையெனும் பூதம் ஆதியை வகுத்தது. அவ்வகையில் முப்பத்தாறு தத்துவங்களும் கொள்ளப்படும்.

2. இரண்டாவது: அதனுள் அசரசர பேதமான யாவையும் வகுத்தது. அதனுள் என்றது, அத்தத்துவங் களாகியபூதாதிநாதாந்தத்துள் என்றதாகும். அவற்றுள் புவனங்களும் அப்புவனங்களுள் சரம் (இயங்குதிணை) அசரம் (நிலைத்திணை) என்னும் இருவகைப் பொருள் களும் உள்ளன. அசரங்களுள் உயிரில்லாப் பொருள் களும் அடங்கும். சரங்கள் எல்லாம் உயிர்களே ஆயினும் உயர்திணை அஃறிணை இரண்டும் அடங்கியன. அசரங் களுள் மரம் முதலிய உயிர்ப்பொருள்களாகிய அஃறிணை மட்டும் உண்டு. உயர்திணை இல்லை. சரங்களுள் புழு முதல் சிங்கம் முடிய உள்ள உயிர்களும் (அஃறிணையும்) உள்ளன.

3. மூன்றாவது: நல்லறிவையும் வகுத்தது. இங்கு நல்லறிவு என்றது உலகியலறிவை அன்று; அதனின் வேறாய் மேற்பட்ட ஞானத்தை. இவ்வகையிலே வைதிக சமயம் அவைதிக சமயம் இரண்டும் அடங்கின.

4. நான்காவது: மறையாதி நூலையும் வகுத்தது. இவ்வகையில் வைதிக சமயங்களுக்கு முதலாதாரமான வேதமும் அதன் அங்கமும், அதன் அந்தம் (முடிவு) ஆகிய உபநிடதமும், இதிகாச புராணங்களும் அடங்கும். அவை தலை இடை கடை என மூவகைப்படும்.

தலையாய ஓத்து

"[1]இருக்கும் [2]எசுரும் [3]சாமமும் தலையாய ஓத்து. இவை வேள்வி முதலியவற்றை விதித்தலின் இலக்கணமும் ஆய் வியாகரணத்தாற் காரியப்படுத லின் இலக்கியமும் ஆயின.

இடையாய ஓத்து

[4]அதர்வமும் ஆறங்கமும் தரும நூலும் இடை யாய ஓத்து. அதர்வம் வேள்வி முதலிய ஒழுக்கங்

கூருது பெரும்பான்மையும் உயிர்கட்கு ஆக்கமே அன்றிக் கேடு சூழும் மந்திரங்களும் பயிறலின், அவற்ரெடு கூறப்படாதாயிற்று.

ஆறங்கமாவன :— [1]உலகியற் சொல்லை ஒழித்து வைதிகச் சொல்லை ஆராயும் நிருத்தமும், [2]அவ்விரண்டையும் உடன் ஆராயும் ஐந்திரத் தொடக்கத்து வியாகரணமும், [3]போதாயனீயம் பாரத்துவாசம் ஆபத்தம்பம் ஆத்திரையம் முதலிய கற்பங்களும், [4]நாராயணீயம் வாராகம் முதலிய கணிதங்களும், [5]எழுத்தாராய்ச்சியாகிய பிரமமும், [6]செய்யுளிலக்கணமாகிய சந்தமும் ஆம்.

தருமநூலாவன :—உலகியல் பற்றி வரும் மநு (தர்மசாத்திரம்) முதலிய பதினெட்டும். இவை வேதத்திற்கு அங்கம் ஆயினமையின் வேருயின.

கடையாய ஓத்து

இனி இதிகாச புராணமும், வேதத்திற்கு மாறுபடுவோரை மறுக்கும் உறழ்ச்சி நூலும், அவரவர் மாறுபடக் கூறும் நூல்களும் கடையாய ஓந்து.

எழுத்தும் சொல்லும் பொருளும் ஆராய்ந்து இம்மைப் பயன் தருதலின் அகத்தியம் தொல்காப்பியம் முதலிய தமிழ் நூல்களும் இடையாய ஓத்து ஆம் என்று உணர்க. இவையெல்லாம் இலக்கணம். இராமாயணமும் பாரதமும் போல்வன இலக்கியம்.

இனித் தமிழ்ச் செய்யுட் கண்ணும் இறையனுரும் அகத்தியனுரும் மார்க்கண்டேயனுரும் வான்மீகனுரும் கவுதமனுரும் போல்வார் செய்தன தலையும்; இடைச் சங்கத்தார் செய்தன இடையும்; கடைச்சங்கத்தார் செய்தன கடையும் ஆகக்கொள்க.

இங்ஙனம் ஓத்தினையும் மூன்றாகப் பகுத்தது அவற்றின் சிறப்பும் சிறப்பின்மையும் அறிவித்தற்கு.
(தொல். பொருள். புறந். 20. நச்சினார்க்கினியம்)

5. ஐந்தாவது: சைவம் முதலாம் அளவு இல்(லாத) சமயமும் வகுத்தது.

சமயங்கள் [1]அகம் [2]அகப்புறம் [3]புறம் [4]புறப்புறம் என நால்வகைப்படும். அந்நால்வகையுள் அகச்சமயம் அல்லாத ஏனை மூன்றும் புறம் ஆதலின், புறச்சமயங்கள் என ஒன்றாயடக்கிக் கூறப்படும். படவே அகச்சமயம் புறச்சமயம் என்று தனித்தனி ஆறுடைய நால்வகையும் இருவகையிற் சுருக்கிக் கூறப்படுதல் உமாபதி சிவம் முதலியோர்க்கு வழக்கம்.

'புறச் சமயத்தவர்க் கிருளாய் அகச் சமயத்தொளி யாய்' என்னும் சிவப்பிரகாசமும்,

"புறச் சமயங்கள் சிறப்பில வாகி
அருள் இல் மாந்தரை வெருளுற மயக்கி
அலகைத் தேரின் நிலையின் தீரும்
ஈங்கு இவைநிற்க நீங்காச் சமயம்
மூவிரு தகுதி மேவிய தாமும்
ஒன்றோ டொன்று சென்றுறு நிலையில்
ஆறும் மாறு வீறுடைத்து இவற்றுள்
எவ்வம் இல்லாச் சைவநற் சமயத்து
அலகுஇல் ஆகமம் நிலவுதல் உள."

என்னும் சங்கற்ப நிராகரணமும் அவ்வழக்கத்தைக் காட்டும்.

அகப்புறம், புறம், புறப்புறம் என்னும் முக்கூற்றுப் புறச்சமயங்களையும் புறம் என ஒன்றாகச் சுருக்கிக்கூறல் பொருத்தமாதலறிக.

(க) புறப்புறச் சமயங்கள் ஆறும்: 1. உலகாயதம், 2. மாத்தியமிகம், 3. யோகாசாரம், 4. சௌத்திராந் திகம், 5. வைபாடிகம், 6. ஆருகதம் என்பனவாம்.

(உ) புறச்சமயங்கள் ஆறும்: 7. தருக்கம், 8. மீமாஞ்சை, 9. ஏகான்மவாதம், 10. சாங்கியம், 11. யோகம், 12. பாஞ்சராத்திரம் என்பனவாம்.

(ங) அகப்புறச்சமயங்கள் ஆறும்: 13. பாசுபதம், 14. மாவிரதம், 15. காபாலம், 16. வாமம், 17. வைரவம், 18. ஐக்கிய வாத சைவம் என்பனவாம்.

(ச) அகச்சமயங்கள் ஆறும்: 19. பாடாணவாதம், 20. பேதவாதம், 21. சிவசமவாதம், 22. சங்கிராந்த வாதம், 23. ஈசுவர அவிகார வாதம், 24. நிமித்த காரண பரிணாம வாதம் அல்லது சிவாத்துவித சைவம் என்பனவாம்.

இவற்றுட் பாடாண வாதத்திற்கும் பேத வாதத் திற்கும் தம்முள் வேறுபாடு சிறிதாகலின், அவ்விரண் டனையும் ஒன்றாக வைத்தெண்ணிச் சுத்த சைவத்தையும் உடன் கூட்டி அகச்சமயம் ஆறு என்றலும் உண்டு. 'மெய்தரு சைவமாதி யிருமூன்றும்' என்னும் சிவஞான சித்தியார் (சூ. 2. திருவிருத்தம். 73) வசநம் காண்க.

கலைக்குமேல் உள்ள தத்துவங்களை உணராமையால், பாசுபதர் முதலியோர் 'வித்தையாதி யெய்து தத்துவங் கள் ஏய்வர்' எனக் கொள்ளுதல் பொருந்தாது.

ஐக்கியவாத சைவர் கலைக்குமேல் உள்ள தத்துவங் கள் உள எனக் கொண்டார் ஆயினும், மூலமலம் உண்டு என்று அறியாமையினாலும், மூலமலம் நீங்கிய முத்தர்க்கு அன்றிச் சுத்த தத்துவ புவனங்களில் எய்துதல் கூடாமையாலும் அவர்க்கு மோக்ஷஸ்தாநம் மோகினிக்கு மேல் சுத்த வித்தைக்குக் கீழ் விஞ்ஞானகலர்க்குரிய

ஸ்தாநமே ஆதலானும், ஏனைப் பாடாண வாத சைவர் முதலியோரே 'வித்தையாதி யெய்து தத்துவங்கள் ஏய்வர்' என்றறிக.

அகச்சமயம் என்றது, "ஏகன் அநேகன் இருள் கருமம் மாயை யிரண்டு' என்னும் ஆறு பொருளுங் கொண்ட பாடாணவாத முதலிய அறு சமயங்களையே ஆகும்.

புறச்சமயம் என்றது அவ்வாறு பொருளுண்மை கொள்ளாத ஏனை முக்கூற்றுப் புறச்சமயங்கள் பதினெட்டனையும் என்றறிக.

புறப்புறச் சமயம்

உலகாயதர் முதல் அறுவரும் வேதம் சிவாகமம் இரண்டனையும் பழிக்கும் நாத்திகர் ஆவர். ஆயினும், ஒரு நூல் என்றும் பிரமாணம் என்றும் கொண்டு ஒரு நெறியிலே நிற்றலால், அவர் நிற்கும் அந்நெறியும் 'சமயம்' எனக் கொள்ளப்படும். படினும் அச்சமயம் புறச்சமயங் களினும் புறமாதலை நோக்கிப் புறப்புறச் சமயம் என வைக்கப்பட்டன.

புறச் சமயம்

தார்க்கிகர் முதல் பாஞ்சராத்திரிகள் முடிய உள்ள அறுவரும் வேதம் பிரமாணம் எனக் கொண்டவர்கள். அக் கொள்கை பொதுவகையே. சிறப்பு வகையன்று. அவ் வேதப்ரமாணத்தை அறுவரும் பொது வகையிற் கொள்ளினும், சிறப்பு வகையிற் சிறிது சிறிது வேறுபட்ட வர்களா யிருக்கின்றார்கள். அவருள்,

1\. தார்க்கிகர் வேதத்தாற் பிராமாணியங் கொள்ளாதவர். வேதப் பொருளொடு முரணிப் பொருட்

டன்மை கொள்பவர். இதைத் தருக்க சங்கிர தீபிகை யுரையிற் காண்க.

2. மீமாஞ்சகர் கரும காண்டமாகிய வேத மாத்திரத்துக்கே பிரமாணம் கொண்டு, ஞான காண்டமாகிய உபநிடதங்களை இகழ்பவர்.

3. ஏகான்ம வாதிகள் ஞானகாண்ட மாத்திரத்துக்கே பிரமாணம் கொண்டு கரும காண்டத்தை இகழ்பவர்.

4. சாங்கியர், 5. யோகர், 6. பாஞ்சராத்திரிகள்—மூவரும் வேத வாக்கியங்களில் தம்தம் மதத்திற்குப் பொருந்துவன மாத்திரமே எடுத்துக்கொண்டு ஏனையவற்றிற்குப் பிரமாணம் கொள்ளாமையாலும் வேதப்புறமாகிய நூல்களைப் பிரமாணமெனக்கொள்ளுதலாலும் இவ் வறுவரும் சிவாகம நிந்தகர் ஆதலாலும் இவர்கள் நெறிகள் புறமாகக் கொள்ளப்பட்டன. படவே இந்நெறிகள் புறச்சமயங்களாக வைக்கப்பட்டன.

அகப்புறச் சமயம்

பாசுபதர் முதலிய ஐவரும் வேதம் சிவாகமம் என்னும் இரண்டு வகைக்கும் பொதுவகையாற் பிரமாணம் கொள்வர். கொள்ளினும், அவ்விரண்டற்கும் புறமாகிய பாசுபதம் முதலிய நூல்கட்குச் சிறப்பு வகையாற் பிரமாணம் கொள்வதாலும், வேதம் சிவாகமம் இரண்டுள்ளும் ஆகாதவை என்று விலக்கப்பட்டவற்றை ஆதரித்து வருபவர்.

ஐக்கியவாத சைவர் வேதம் சிவாகமம் இரண்டற்கும் சிறப்பு வகையாற் பிரமாணம் கொண்டு, அவற்றில் விலக்கியவற்றை ஒழித்து விதித்தவற்றில் ஒழுகுவர் ஆவர். ஆயினும் எல்லாப் பெருங் கேட்டிற்கும் மூல காரணமாகிய **ஆணவமலத்துண்மை** கொள்ளாதவர்,

ஆணவமலம் உண்டு எனச் சாதிக்கும் சிவாகம வாக்கியங்களை இகழ்பவர். இக் காரணங்களால் இவ்வாறு வேதசிவாகமங்களை உடன்பட்டும் வேறு நூல்களைப் பிரமாணமாகக் கொண்டமையாலும், உடன்பட்ட வேத சிவாகமங்களைச் சிறப்பு வகையிற் கொள்ளாமையானும், பாசுபதர் முதலிய ஐவர் நெறியும் ஆணவமலத்துண்மை கொள்ளாமையானும், அதனை யுணர்த்தும் சிவாகம வசனங்களை யிகழ்தலானும் ஐக்கியவாதர் நெறியும் அகத்திற் புறமாக வைக்கப்பட்டன.

இதுவரை சொல்லியவற்றால், பொதுவிலும் சிறப்பிலும் வேத சிவாகமங்களை உடன்பட்ட நெறியே அகம் ஆதலும், அவ்வாறு இல்லாதவை புறம் ஆதலும் நம் நெறியின் வகுத்த வகை என்று தெளிவாயிற்று. இதுவரையில் விளக்கிய பதினெட்டும் புறமாதலும், அப்புறம் எல்லாம் அகப்புறம், புறம், புறப்புறம் என மூவகையாதலும் அறியப்பட்டன.

இனி அகச்சமயம் ஆறும் சித்தாந்த சைவத்தொடு ஒப்பப் பொருளுண்மையெல்லாம் கொண்ட உள்ளுரிமை (அந்தரங்கபாத்யம்) உடையனவாம். ஆயினும், அவ்வப் பொருள்கட்குக்கூறும் சிறப்பியல்பு(தன்னியல்பு ஸ்வரூப லக்ஷணம்), பொதுவியல்பு (தடஸ்தலக்ஷணம்) மாத்திரத்தில் மாறுபடுதலின், அவர் நெறிகள் சித்தாந்த சைவத்தின் அகத்தனவாய் நின்றன. புறத்தன என்று ஒதுக்கி வேறு வைக்கப்படாதனவாயின.

சிவாத்துவித சைவமாவது நிமித்தகாரணத்துக்குப் பரிணாமங் கூறுவது. அதனால் அதை நிமித்த காரண பரிணாமவாதம் எனலுமுண்டு. அதைச் சுத்த சைவம் என மயங்குவர். நுட்பப் பொருளுணராமையே பற்றிச் சுத்த சைவம் என வேறு வைக்கப்பட்டது. கருத்து

வகையாற் சித்தாந்த சைவத்தின் வேறன்று. அச் சுத்த சைவம் சித்தாந்த சைவத்தில் அடங்குவதே. அதனுற்ருன், 'நிலவுலகாயதாதி நிகழ் சிவாத்துவி தாந்தத்துக் குலவினர் அளவளாவாக் கொள்கையது" என்று ஏனைச் சமயங்களை எடுத்தோதி விலக்கிச் சுத்த சைவத்தை அங்கனம் விலக்காரானுர் உமாபதி சிவனுர்.

இவ் வைப்பு முறையால், முதல் மூவாறு (பதினெட்டு) நெறிகளுக்கும் வேருன நெறிகளே அகச் சமயம் எனப்பட்ட அறுநெறியும் என்று அவற்றின் தனிச் சிறப்பு விளங்கிற்று.

6. ஆருவது : மேற்சமயங்கடந்த மோன சமரசம். இனி அவ் விருபத்து நான்கு சமயங்களுக்கும் அதீதம் ஆனதும் அவற்றின்கண் இல்லாத தனிச் சிறப்புடைய தும் முடிந்த முடிபுமாய் விளங்குவது சித்தாந்த சைவம். இதையே 'சைவசித்தாந்தம்' என்பர். இதைத்தான் நமக்குத் தாயுமான சுவாமிகள் ஆகார புவனம் சிதம்பர ரகசியம் என்னும் தலைப்புடைய பகுதியில் 10ஆவது திருப்பாடலில் வைதிக சைவம்என்று போற்றி உணர்த்து கின்ருர்.

" இயல்பென்றுந் திரியாமல் இயமம் ஆதி
எண்குணமும் காட்டி அன்பால் இன்பம்ஆகிப்
பயன்அருளப் பொருள்கள் பரிவாரம் ஆகிப்
பண்புறவும் சௌபான பக்ஷம் காட்டி
மயலறு மந்திரம் சிக்ஷை சோதிடாதி
மற்றங்க நூல்வணங்க மவுனமோலி
அயர்வறச் சென்னியில் வைத்தி ராசாங்கத்தில்
அமர்ந்தது வைதிக சைவம் அழகிதந்தோ "

இதில் அதன் உண்மைத் தனிச்சிறப்பை வெளிப்படுத்தி யருளியதறிக. இதிற் குறித்த இயல்பு யாது எனின்,

முற்குறித்த சமயங்களுமாகி, அவை அல்லதுமாகி, "யாது சமயமும் வணங்கும் இயல்பு" என்க.

" அந்தோ ஈது அதிசயம் இச்சமயம்போல் இன்று
அறிஞர் எலாம்நடு அறிய அணிமா ஆதி
வந்தாடித் திரிபவர்க்கும் பேசா மோனம்
வைத்திருந்த மாதவர்க்கும் மற்றும் மற்றும்
இந்த்ராதி போகநலம் பெற்ற பேர்க்கும்
இது அன்றித் தாயகம்வேறு இல்லைஇல்லை
சந்தான கற்பகம்போல் அருளைக்காட்டத்
தக்கநெறி இந்நெறியேதான் சன்மார்க்கம்."

அகச் சமயத்து முடிவில் நின்ற சுத்த சைவத்தை முதலில் வைத்து, "மாலறவும் சைவ முதல் மதங்களாகி, மதாதீதமான அருள்மரபு வாழி" என்றார். சைவ சித்தாந்தத்தை 'மதாதீதம்'என்றார் இங்கும். 'சமயங்கடந்த மோன சமரசம்' என்றார் 'சின்மயானந்த குரு' என முடியும் அங்கும். இச் சமயாதீதம் என்னுந் தனிச் சிறப்புடையது சித்தாந்த சைவம் என்ற ஒன்றே. இதனை நிறுவ முயல்வது அறியாமையிற் கொண்டுபோய் விடும். என்னை எனில்,

" உரையுணர் விறந்து தம்மை உணர்பவர் உணர்வினூடே
கரையிலா இன்பவெள்ளங் காட்டிடும் முகிலே மாறாப்
பரையெனுங் கிரணஞ் சூழ்ந்த பானுவே நின்னைப் பற்றித்
திரையிலா நீர்போல் சித்தந் தெளிவனோ சிறியனேனே"

" திரையற்ற நீர்போல் தெளிய எனத் தேர்ந்த
உரைபற்றி உற்றங் கொடுங்கும் நாள் எந்நாளோ"

" உரையற் றுணர்வற் றுயிர்பரம் அற்றுத்
திரையற்ற நீர்போல் சிவமாதல் தீர்த்துக்

கரையற்ற சத்தாதி நான்குங் கடந்த
சொரூபத் திருத்தினன் சொல்லிறந் தோமே.”

(திருமந்திரம் 1593)

என்றுள்ள அருண்மொழிகளை நோக்கின், உரையுணர்விறந்து நின்றுணர்வதோருணர்வை நிறுவ முயல்வது அறிவாமோ? ‘கல்லாலின் நீழல்’ எனத் தொடங்கும் முப்பது பாடல்களையும் இங்கு வைத்து நோக்குவது பெருநலம் பயக்கும்.

‘கயல்மாண்ட கண்ணி’, ‘வான்கெட்டு மாருதம் மாய்ந்து’ எனத் தொடங்கும் திருவாசகங்களை இங்கு நினைக்கவேண்டும். ‘சொல்லிறந்து நின்ற தொன்மை’யைச் சொல்லால் நிறுவல் இயலுமோ? பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலரை’ப் பாரில் வாழ்ந்து நின்றே பற்றிக்கொள்ள முடியும்? “சொல்லாய தொகுதியெல்லாங் கடந்து நின்ற சொரூபாநந்தச் சுடரே” அது.

அத்தகு சமயாதீதத்தை அவ்வதீதத்தில் இருந்து நம்பால் வைத்த கருணைப் பெருக்கால் தானே ஏதேனும் ஒரு வடிவு கொண்டுவந்து காட்டி ஆட்கொண்டால் அன்றி, நாமே அப்பொருளை எப்படி அடைய இயலும்?

“ அகளமாய் ஆரும் அறிவரிது அப்பொருள்
சகளமாய் வந்தது என்று உந்தீபற,
தானாகத் தந்தது என்று உந்தீபற.”

இத்திருவுந்தியாரில் ‘ஆரும்’ என்றது தற்போதம் உடையாரெல்லாரையும் பொருளாக் கொண்டது.

[1]அத்துவா மூர்த்தியாதல் [2]உலகெலாமாதல், [3] நவந்தருபேதமாதல் [4] அட்டமூர்த்தமாதல் [5] இவற்றின் வேருதல் ஏதேனும் ஒரு திருமேனி கொண்டு வருதலைச் சகளமாய் வருதல் என்பர். தானாகல்:—உண்

மைச் சரியை, உண்மைக்கிரியை, உண்மை யோகம் மூன்றும் முற்றுதலால் உண்மை ஞானம் விளங்கப்பெற்று, ஞாதுரு, ஞானம், ஞேயம் இறவாதிறந்து நின்று ஞேயத்தைப் பொருந்திச் சிவாநந்தத்தை அநுபவத்தில் அடைந்து நிற்றல் என்னும் ஆன்மாவின்செயல். தானாகத் தருதல்:—அப்பேரின்ப நிலையை ஆன்மாவிற்குத் தருதல் என்னும் சிவன் செயல். இந்நிலையே,

" ஆதனமும் ஆதனியு மாய்நிறைந்து நின்றவனைச்
சேதனனைக் கொண்டே தெளிவுற்றுச்—சேதனனைச்
சேதனனி லேசெலுத்திச் சிற்பரத்த ராயிருப்பர்
ஏதமறக் கண்டவர்கள் இன்று "

என்றதிற் கூறும் நிலை.

சேதனனைச் சேதனனிலே செலுத்தல் என்றால் என்ன? ஆன்ம ஞானம் சிவஞானமாகவும் ஆன்ம இச்சை சிவனிச்சையாகவும் ஆன்மக்ரியை சிவக்ரியை ஆகவும் நிற்றல் ஆகும். ஆகவே பசுகரணங்கள் பதிகரணங்களாக வசிபெறும் உயரிய நிலை என்று தெளிவுறும். ஏகனாகி யிறைபணி நிற்றல் இதுவே. இதன் மேல், சிற்பரத்தரா யிருத்தலாவது யாது? இவ்வினாவிற்கு விடை தெரியவேண்டும். அது தான் 'சமயங் கடந்த மோன சமரசம்' எனப்பட்ட சித்தாந்தம். சித்-ஞானம். சிற்பரம் - மோனம். ஞானம் உள்ளவரை சமயம் உண்டு. ஞானாதீதம் மோனம். அங்குச் சமயம் இல்லை. அதுவே சமயாதீதம், சமயங்கடந்த நிலை. அந்நிலையே மோன நிலை. சமய ஞானவெல்லையைக் கடக்கும் வரையில் 'ஞானி' என்றும் கடந்தபின் 'மோனி' என்றும் வழங்கப்பெறுதல் பழைய முறைமை.

" மோனமென்பது ஞான வரம்பு "

... ... " மோனஞான
நாட்டமுற்று வாழ்ந்திருக்கும் நாள்எந் நாளோ ?"
—தாயுமானவர், (கல்லாலின் : 8)

உடல் பொய்யுறவு : 73—83ம் பாயப்புலி 26ம் பார்க்க.

" ஞானிகளா யுள்ளார்கள் நான்மறையை முழுதுணர்ந்தைம்
புலன்கள் செற்று
மோனிகளாய் முனிச்செல்வர் தனித்திருந்து தவம்புரியும்
முதுகுன்றமே "

என்னுந் திருஞானசம்பந்தரருளிய திருக்கடைக்காப்பால் 'ஞானிகள் மோனிகள்' என்னும் பாகுபாட்டுண்மையை ஒருவாறு உணரலாம். இதில் மோனிகளின் இலக்கணமும் சுருக்கிக் கூறப்பட்டிருக்கின்றது. * * * * திருமந்திரம் 2135 பார்க்க.

"மோனந் தவாமுனிவர் மும்மலத்தை மோசித்துத் தானந்த மானிடத்தே தங்கியிடும் ஆநந்தம்" சமயாதீதத்து முடிவுநிலையையும் அந்நிலையிற் பெறும்பேற்றினையும் கூறும் உண்மை விளக்கம் இங்கு உணரத் தக்கது. அவ்வானந்தத்தை மொண்டு அருந்தி நின்ருடலே (அவ்வாடலே உயிர்ப் பொருட்டாற்) காணும் அருளைத் தனக்கு மூர்த்தம் (வடிவு) ஆகக் கொண்ட திருவம்பலத்தான் கூத்து. இதுதான் சமயாதீதப் பழம்பொருள். இப்பொருளையே தாயுமானவர் பின் வருமாறு விளக்கியருளினர்.

" வேறுபடுஞ் சமயமெலாம் புகுந்து பார்க்கின்
விளங்கு பரம்பொருளேநின் விளையாட்டல்லால்
மாறுபடுங் கருத்தில்லை முடிவில் மோன
வாரிதியில் நதித்திரள்போல் வயங்கிற்றம்மா "

என்ற அநுபவம் எப்போது வரும்? அப்போதுதான்

சித்தாந்த சைவம் சமயாதீதம் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போலத் தெள்ளிதின் விளங்கும். அவ் விளக்கம் பெற்றதால்தான் சைவ சமயமே சமயம் என்று பாடியருளினர்.

"சைவ சமயமே சமயம் சமயாதீதப் பழம்பொருளைக்
கைவந்திடவே மன்றுள் வெளிகாட்டும் அந்தக் கருத்தைவிட்டுப்
பொய்வந் துழலுஞ் சமயநெறி புகுதவேண்டா முத்திதருந்
தெய்வ சபையைக் காண்பதற்குச் சேரவாருஞ் செகத்தீரே"

என மும்முறை அழைத்தபோது இரண்டாவது முறையாக அழைத்த அழைப்பில் வைத்து உணர்த்தியருளினர். அழைப்பவர் வாரும் வாரும் வாரும் என மும்முறை அழைத்தல் வேண்டும் எனும் விதியை யொட்டி மும்முறை அழைத்தார். இதில் 'மன்றுள் வெளி காட்டும்' என்றதால் The Chidambaram is a Map என்றவாறாயிற்று. அதன் உண்மை நிலையை முதலழைப்பில்,

"ஒன்றாய்ப் பலவாய் உயிர்க்குயிராய் ஆடுங்
கருணைப் பரஞ்சோதி அருள்"

என்றும், மூன்றாவது அழைப்பில்,

"அகண்டாகார சிவபோகம் எனும் பேரின்ப வெள்ளம்
பொங்கித் ததும்பிப் பூரணமா யேகவுருவாய்க் கிடக்குது"

என்றும் விளக்கியருளினர்.

முதல் அழைப்பில் பருவம் இது என்று காட்டினர். இரண்டாவது அழைப்பில் அப்பருவத்தைக் கடைப்பிடிக்கத்தக்கதைக் கடைப்பிடியாதும் கைவிடத் தக்கதைக் கைவிடாதும் கெட்டுப்போகலாகாது என்று தள்ளற்பாலதும் கொள்ளற்பாலதும் கூறினர். மூன்றாவது அழைப்பில் எடுத்த தேகம் விழும் முன் பேரின்பம் புசிக்கவேண்டும் என்று விரைவு குறித்தார்.

'நில்லாதவற்றை நிலையின என்றுணரும் புல்லறி வாண்மை கடை'யாதலின், நில்லாத- தேகம் வீழாது நிற்கின்றபோதே விள்ளற்பாலதனை விண்டு கொள்ளற்பாலதனைக் கொண்டு ஆன்ம லாபம் பெறுதல் தலையாயார்க்குக் கடப்பாடு என்று குறிப்பது தலையாய தாயுமானர் கருணைக்கு முற்றும் உற்றதன்றோ? 'சகத்தீரே' என்றதால், தாயுமானவர் பரம கருணாமூர்த்தியாதல் வெளிப்பட்டது. 'சமயங் கடந்த மோன சமரசம்' என்ற உண்மையைச் சகத்தவர் எல்லாரையும் அழைத்ததாலும் உணரக்கூடும். சைவ சித்தாந்தத்தைப் போலச் சமயாதீதம் ஒன்றும் இல்லை. 'அன்பே சிவம்' என்ற ஒன்றே அதற்குச் சான்று. 'அன்பே...........' என்று எச்சமயத்தில் எவர் வழங்கினர்? 'சமயங்கடந்த மோன சமரசம்' என்றதும் 'அன்பே சிவம்' என்றதும் தன்மையால் ஒன்றே. இது சித்தாந்த சைவத்துக்கே யுரிய தனிச்சிறப்பு.

திருமந்திரத்தில் எட்டாவது தந்திரத்தில், அந்தம் ஆறும் உணர்த்தப்பட்டன. அவ்வாறந்தங்களையும் உணரின், சைவ சித்தாந்தத்தின் தனிச்சிறப்பு நன்கு புலனாகும். அவற்றை,

1. கலாந்தம் (பிராசாத யோகமார்க்க முடிபு)
2. நாதாந்தம் (காரியேசுவர காரணேசுவர தியாக முடிபு)
3. யோகாந்தம் (அஷ்டாங்க யோகமார்க்கசமாதிமுடிபு)
4. போதாந்தம் (தத்துவஞானமார்க்க முடிபு)
5. வேதாந்தம் (ஞாதுரு, ஞானம், ஞேயம் மூன்றும் அருமல் அற்ற நிலை, - தாயுமானவர் பாடல், சிவன் செயல் - 8)

6. சித்தாந்தம் (முதல் ஐந்தற்கும் மேலான சிவசாயுச்சிய நிலை)

என்னும் முறையில் நிரல்பட வைத்து உளங்கொண்டு கடைத்தேற வேண்டும். இவ்வுண்மையைச் சிவயோக சாரக் கட்டளை என்னும் ஒரு நூலால் அறியலாம்.

" வேதத்தி னந்தமும் மிக்க சித்தாந்தமும்
நாதத்தி னந்தமும் நற்போத வந்தமும்
ஓதத் தகுமெட்டின் யோகமாம் அந்தமும்
ஆதிக் கலாந்தமொ டாறந்த மாமே."

என்ற திருமந்திரப் பாடலும் கலாந்தத்தை ஆதி என்ற தால், அஃது யாப்பிற்கியையக் கொண்ட அமைப்பு என்பதும் அப்பாடலில் உள்ள முறையை முறையாகக் கொள்ளல் ஆகாது என்பதும் ஊகித்துணரலாம். தாயுமானவர், பராபரக்கண்ணி, 18, 19 பார்க்க.

இத்திருமந்திரப் பாடல்களில் கூறும் ஆறந்தங்களையும் திருவானைக்காவில் அகிலாண்டேசுவரியின் அருள் பெற்ற சிவயோக சித்தர்களுள் ஒருவர் 'புவனை கலைஞான தீபம்' என்னும் ஓர் அரிய ஞான நூலில் நன்கு விளக்கி யருளினர். அவற்றையும் திருமூலர் திருவாக்கொடு வைத்து ஆராய்ந்துணர்வது சாலத் தெளிவுண்டாக்கும். அதனால் இங்கு அவற்றை முறையே பொருத்திக் காணலாம்.

(க) " கொள்கையி லான கலாந்தங் குறிக்கொள்ளில்
விள்கையி லான நிவிர்த்தா திமேதாதிக்கு
உள்ளனவாம் விந்தும் உள்ளே ஒடுங்கலும்
தெள்ளி அதனைத் தெளிதலும் ஆமே "

என்பது திருமந்திரம்.

இதன் விளக்கம்,

அளிக்கும் புவனம் புவனத்தில் ஐவர் கலைகள் ஐந்து
திளைக்கும்நற் சத்திகள் எல்லாம் தெரிந்து செகம்அனைத்தும்
வளைக்கும் பரவிந்துத் தன்னுள் அடங்கமெய்ஞ் ஞானஇன்பம்
அளிக்கும் கலாந்தமும் தானாகி நிற்பவள் அம்பிகையே.

என்றது, 'புவனை கலைஞானதீபம்' என்று ஸ்ரீஅகிலாண்ட நாயகி துதியும் சாத்திரப் பொருளும் ஆக ஈரைம்பது பாடலால் அமைந்த நூலின்கண் உள்ளது. இதனைப் பிராசாதயோகம் புரிவாரே தெளிந்துகொள்ளத்தக்கவர். ஏனையோர்க்கு ஒன்றும் விளங்காது. இது விந்து தத்துவத்தைக் கடந்ததாகும்.

(உ) கலாந்தத்தினை அடுத்து நாதாந்தம் உளது. கலைகளைக் கடந்ததும் நாதத்தைக் கடத்தல் வேண்டும். நாதாந்தத்தைத் திருமூலர்,

மேவும் பிரமனே விண்டு உருத்திரன்
மேவும் எம்ஈசன் சதாசிவன் மிக்குஅப்பால்
மேவும் பரவிந்து நாதம் விடஆறு
ஓவும் பொழுது அணுஒன்றுள தாமே.

என்றருளினர். சிவபூஜை புரிவோன் காரணேசுவரத் தியாகம்செய்யும் முறைமையில் அயன், மால், அரன், மகேசன், சதாசிவன் ஆய ஐவரையுங் கடந்து தான் மட்டும் நாதமுடிவை அடைதலை விதிப்படி செய்யுங்கால் அறியலாம்.

(ங) கலை முடிவையும் நாதமுடிவையும் அடைந்த ஆன்மா, அடுத்து யோகாந்தம் அடைதல் வேண்டும். நாத தத்துவத்தைக் கடந்த முறையைப் புவனை கலை ஞான தீபத்திலே விளக்கியது காண்க.

விரிகின்ற பூதத் தலைவரும் விந்துவும் விட்டகல
வருகின்ற நாதத்தே மான்கண் டதனுள் மனம்அடங்கத்
*தருகின்ற மானுரும் ஆரூறும் நீங்கித் தனதுருவாய்த்
தெரிகின்ற நாதாந்த நேசமும் ஆகும் திரிபுரையே.

என்று (முப்பத்தாறுவதும் முதலாவதும் என ஒடுக்க முறையிலும் தோற்ற முறையிலும் ஆகும்) நாததத்துவத்திலேயும் நில்லாது அதனையும் கடந்து நிற்கும்நிலையையும் அது திரிபுரை யென்னும் சத்தியின் கலை யாதலேயும் உணர்த்தியது இக்கட்டளைக் கலித்துறை.

அடுத்தது யோகாந்தம். அதனைத் திருமூலர்,

“ தேடும் இயமம் நியமாதி சென்றுஅகன்று
ஊடும் சமாதியில் உற்றுப் பரசிவன்
பாடுஉறச் சீவன் பரம்ஆகப் பற்றுஅறக்
கூடும் உபசாந்த யோகாந்தக் கொள்கையே ”

என்று கூறுகிறுர்.

இது கிரியாமார்க்கத்துக் காரணேசுவர த்யாகக்ரமத்தின் வேருயதும் யோகமார்க்கத்ததும் எட்டு உறுப்புக்களை யுடையதும் ஆன யோகத்தின் முடிவை உணர்த்திற்று. 1. இயமம், 2. நியமம், 3. ஆசனம், 4. பிராணுயாமம், 5. பிரத்தியாகாரம், 6. தாரணை, 7. தியானம், 8. சமாதி என்னும் பெயரிய உறுப்பு எட்டும் கூடியதே யோகம். இவற்றுள் முடிவான சமாதியில் எட்டும் அடங்கியிருக்கும். தியானத்தில் ஏழும், தாரணையில் ஆறும், பிரத்தியாகாரத்தில்ஐந்தும், பிராணுயாமத்தில்நான்கும், ஆசனத்தில் மூன்றும், நியமத்தில் இரண்டும் அடங்கும். இவ்வுண்மை யோகானுபவம் உடையார்க்கே புலனுகும்.

---

*இவ்வடியில் உள்ள பிழையை மறந்துவிட்டேம். அதனுல் திருத்தவில்லை.

" விரிக்கும் இயம நியமா சனத்தின் விதிஅறிந்து
சரிக்கும் அநிலனை நேரே நிறுத்திச் சமாதிபெற்றே
இருக்கும் பொழுதில் உபசாந்த நிட்கள *ஞேயம்எய்திப்
பரிக்கும் தனியினி யோகாந்தம் எங்கள் பராபரையே "

என்பது புவனை கலைஞான தீபம். இதில் யோகங்களை விதிப்படி பயின்று அவ்யோக மார்க்கத்தில் நின்று யோகத்தின் முடிவாகி விளங்கும் பராபரையின் கலையொடு கூடி அதுவாய் நிற்கும் சமாதிகூறிற்று. இதிலும் 'போதம்' உண்டு. அது சிவபோதமாத்ரம் ஆக இருப்பின் குற்றம் இல்லை. சீவபோதமும் அங்குக் கலந்துள்ளது. அதனால், அதனையும் கடத்தல் வேண்டும். அக்கடப்பே 'போதாந்தம்' ஆகும்.

" உள்ள உயிர்ஆ றாறும் உபாதியைத்
தெள்ளி அகன்று நாதாந்தம் சென்றுமேல்
உள்ள இருள்நீங்க ஓர்உணர்வு ஆகுமேல்
எள்ளல்இல் யோகாந்தத்து எய்திடும் போதமே "

என்கின்றது. இது திருமந்திரப் பதிப்புக்களில் மிக்க பிழையுடைத்தாய்க் காணப்படுகின்றது. இங்குக் காட்டியபடியே இத்திருமந்திரப் பாடல் இருத்தல் வேண்டும் என்றதை இதன் விளக்கமாகிய புவனை கலைஞான தீபத்தால் வெளிபெறக் கண்டு இருள் நீங்கலாம். நாதாந்தத்தைக் கடந்த பின்னர் யோகாந்தம் கடத்தற்பாலது. அவ்யோக முடிவைக் கடந்து நிற்பது போதாந்தம் ஆகும். ஆகவே, 'நாதாந்தத் தேற்றிடும்' என்பது பிழையெனல் தெளிவுறும். 'ஆறதாகும் உபாதி' என்பதும் பிழையே. முப்பத்தாறு தத்துவமும் உயிர்க்கு உபாதி என்று சைவசித்தாந்தம் கூறும். இத்திருமந்திரப் பாடற் பொருளையுணர்த்தும்,—

குறிப்பு :—*ஞேயம் அறியப்படு பொருள். 'நேயம்' என்றலும் உண்டு.

"அறையும் கலாந்தமும் நாதாந்தமும் அட்ட யோகாந்தமர்ந்
துறையும் செறிந்துபின் ஆறும் நீங்கித் துணிந்ததினே
நிறையும்அப் போதத்தின் உள்ளே அடங்கிய *நேயஇன்பம்
உறையும்அப் போதாந்த ரூபமு மாம்எங்கள் உத்தமியே."

அடுத்தது வேதாந்தம் ஆகும். அதைத் திருமந்திரம்,

"தானான வேதாந்தம் தானென்னும் சித்தாந்தம்
ஆனாத் துரியத்து அணுவன் றனைக்கண்டு
தேனார் பராபரஞ் சேரச் சிவோகம்ஆய்
ஆறு மலம்அற்று அருஞ்சித்தி ஆதலே."

இதன் முதலடிக்குரிய பொருளை யுணரவேண்டி, ஒரு பழைய வெண்பாவை ஈண்டுக் காட்டுவம்.

"அறிவுக்கு அறிவுஎன்னும் ஆகமங்கள்; சுத்த
அறிவுஎன்னும் வேதத்தின் அந்தம்—பிறிதில்
நிலைக்கின் சமம்ஆகும்; நீஎன்றால் நான்என்று
அலைக்கும் பிரமா தியை."

புவனை கலைஞான தீபத்திலே இத்திருமந்திரப் பாடற் பொருளை விளக்கியவாறு இது:—

"மறவா மலஞ்செற்று மேலாந் துரியத்தின் வாழ்வறிந்து
நிறுவா மனத்தை நிறுவிச்சிற் பூரண நின்மலமாய்ப்
பெறுவானும் பேறும்அற்று ஒன்றும் சிவோகப் பெரியஇன்பம்
உறுவார் உறுகின்ற வேதாந்தம் எங்கள் உலகம்மையே."

இதில் 'வேதாந்தம்' என்றது சித்தாந்த சைவத்தை. மாயாவாத வேதாந்தத்தை அன்று. முன்னர்ப்

---

*நேயம் - ஞேயம் - அறியப்படுவது. ஞேயமாகிய பேரின்பம். அப்புவனை கலைஞான தீபத்தைநோக்கின் ஆறறு (தத்துவமும்) என்பது உறுதிப்படும்.

போதாந்த ரூபம் உத்தமி' என்றதும் பின்னர் இதிற் சிவோகம் என்றே இருக்கின் எய்தும் பேரின்பம் உறுவார் உறுகின்ற வேதாந்தம் உலகம்மை என்றதும், முதல் மூன்று பாடல்களிலும் 'கலாந்தம் ஆகி நிற்பவள்' 'நாதாந்த நேசமும் ஆகும் திரிபுரை' 'யோகாந்தம் பராபரை' என்றமையும் நோக்கி யுணர்ந்தவர்க்குச் சிவ சிற்சத்தியின் கலாபேதம் ஓரளவு விளங்கும். அது விளங்கினால் அன்றிச் சிவநிலையின் பேதமும் சைவ சித்தாந்தத்தின் தனிச் சிறப்பும் விளங்க வழியில்லை.

இது 1. கலாந்தம், 2. நாதாந்தம், 3. யோகாந்தம், 4. போதாந்தம், 5. வேதாந்தம் வரை ஆகிய ஐந்து முடிவுகளைப் பாட்டளவில் கேட்டனம். இவற்றை அநுபவத்திற் சிந்திந்துத் தெளிந்தவர்க்கே சித்தாந்தம் புலனாகும். அதில் உறுதியாய் நிற்கும் (நிட்டையால்) பேறு உண்டாகும். அஃது ஆறுவது அந்தம். அச்சித்தாந்தமாவது·திருமந்திரத்தில் உள்ளவாறே உணர்தற் பாலது.

" நித்தம் பரனோ டிருந்து நீள்மனம்
சத்தம் முதல்ஐந்தும் தத்துவத் தால்நீங்கிச்
சுத்தம் அசுத்தம் தொடரா வகைநினைந்து
அத்தன் பரன்பால் அடைதல்சித் தாந்தமே "

இச்சித்தாந்தமே சைவ சித்தாந்தம். இதை அனுபவிப்பதே சைவர் கடன். புவனை கலைஞானதீபம் இச் சித்தாந்தத்தை,

" அந்தம்ஓர் ஆறினுட் சைவசித்தாந்தம் அரிதரிது ;
விந்துவும் நாதமும் யோகமும் போதமும் வேதமும்ஆம்
இந்த வகைஐந்திற்கு அப்புறம் ஆம்.அது, எய்தஎன்றால்
சுந்தரி பாதம் தொழுதிடிற் கூட்டுவள் சொல்வது அன்றே."

'சொல்வது அன்று' என்றது அநுபவம் ஒன்று லேயே அறியத்தக்கது என்றவாறும். அநுபவத்தால் அன்றி யறிய வொண்ணுதது நம் சித்தாந்த சைவத்தின் உண்மை. அதை அத்தோத்திரம் 'சொல்வது அன்று' என்று இரு சொல்லாம் ஒரு தொடர் கொண்டு சுருக்கிச் சொல்லியது. அது விளங்காமற் போகுமோ என்னும் ஐயத்தால் ஒரு பாட்டு முழுதும் அதற்கு விளக்கமாகத் தோன்றிற்று.

"புரையின்றிப் போக்குவரவினை யோதிற்றுப் பூரணமாய்க்
கரையின்றி வாக்கு மனத்துக் கெட்டாது கடந்துநின்ற
பரையின் திருவருள் ஈதென யாரே பகர்வர்அம்மா
உரையின் றுறக்கத் திருப்பதல் லால்என் உரைப்பதுவே."

இவ்வாறு அந்தங்களுள் முடிவானது நம் சித்தாந்தம். இதற்குமுன் அந்தம் வேதாந்தம். அவ்வேதாந்தம் மாயாவாத வேதாந்தமோ உபநிடத வேதாந்தமோ அன்று. அதன் உண்மை இதில் ஐந்தாவது அந்தமாக விளக்கப்பட்டது. 'வேதாந்த சித்தாந்தம்' என்பதற்கு வேதாந்தமாகிய சித்தாந்தம் என்பது பொருள்.

"உறுவார் உறுகின்ற வேதாந்தம்
எங்கள் உலகம்மையே"

என்றதன் இடம் எது? கலாந்தத்திற்கும் நாதாந்தத்திற்கும் யோகாந்தத்திற்கும் போதாந்தத்திற்கும் மேலான இடம். எல்லா மதங்களும் கலாந்தத்தொடு நிற்பனவே. நம் சித்தாந்த சைவம் ஒன்றே.

"பூதமும் கரணம் பொறிகள்ஐம் புலனும்
பொருந்திய குணங்கள் ஓர் மூன்றும்
நாதமுங் கடந்த வெளியிலே;" சிவத்தை
நன்னெறி யொழுகும்நல் லுயிர்கள்

" வாதமும் சமய பேதமுங் கடந்த
மனோலய இன்பசா கரத்தில் "
ஏதமொன் றும்சாராதியைந்தநு பவிக்கும்
ஈடெடுப் பிலாதமெய்ச் சமயம்.

" வீறிய வேதாந்த முதல் மிக்ககலாந்தம் வரை
ஆறும்உயர்ந்தோர் உணர்வுக்கு அன்புவைப்ப தெந்நாளோ "

என்றருளிய தாயுமானவர் முடிவுகளுள் முடிவாகிய சித்தாந்தத்தை 'வீறிய வேதாந்தம்' என்றதை யுணர்தற்கே ஆறந்தங்களையும் இதில் எடுத்துக்காட்டலாயிற்று.

இவ்வேதாந்தம் உலகர்க்குத்தெரியாதது. புதியது. சைவ சித்தாந்திகட்கே அநுபவ சித்தமான தொன்மையது. அதனால், திருமூலதேவ நாயனர் 'நவமான வேதாந்த ஞான சித்தாந்தமே' என்று முடிந்த முடிபை யுணர்த்தி, இச் சித்தாந்தத்தில் முத்தியடையலாமே அன்றி மற்றொன்றாலும் அடைய வாராது என்று உறுதியாக அறுதியிட்டு உணர்த்தியவாறு :

" சித்தாந்தத்தே ஜீவன் முக்தி சித்தித்தலால்
சித்தாந்தத்தே நிற்போர் முத்தி சித்தித்தவர்
சித்தாந்த வேதாந்தம் செம்பொருள் ஆதலால்
சித்தாந்த வேதாந்தம் காட்டும் சிவனையே "

என்று உபதேசித்தருளினர்.

இதுவே "அவம் அற்ற வேதாந்த சித்தாந்தம்." இச் சித்தாந்தத்தை உணர விரும்பி முயல்வோர் இதன் முன்னைய அந்தங்கள் ஐந்தும் உணரக்கடவர். அவ்வைந்து அந்தங்களையும் நன்கு அநுபவித்து உணர்ந்தோரே சிவம் என்னும் அதிசுத்தர் ஆவர். அல்லாதார் மலத்தரே அன்றிச் சுத்தர் அல்லர்.

" அந்தம்ஓர் ஆறும் அறிவார் அதிசுத்தர்
அந்தம்ஓர் ஆறும் அறியார் மலத்தர் "

என்றருளியதும் காண்க. மலமுத்தர் - அழுக்குடையவர். மும்மலம் - மூன்றழுக்கு. அவை நீங்கினோர் அதிசுத்தர். 'அறியார் அமலத்தர்' என்றும் பாடங் கொள்வார்க்கு நாம் எவ்வாறு அறிவிக்கவல்லேம்? ஆறந்தங்களும் கடந்ததே ஞேயம். அஞ்ஞேயத்திலே மற்றை ஞாதுரு ஞானம் இரண்டும் நழுவாமல் நழுவ நிற்கும் நிலையே மோன நிலை. அதற்கு முந்திய நிலை ஞானநிலை. அந்நிலை வேறுபாட்டால் ஞானிகள் மோனிகள் என்னும் வகையினர் ஆயினர்.

" ஞானிக்குக் காயம் சிவம்அஞ் ஞானிக்கு
ஊன்நிற்குங் காயம் உடம்பே யதுவாகும்
மேல்நிற்கும் யோகிக்கு விந்துவும் நாதமும்
மோனிக்குக் காயமும் பாழ்கெட்ட முத்தியே"

என்னும் திருமந்திரத்தால் ஞானிகட்கும் மோனிகட்கும் உள்ள வேறுபாடு புலனாகும்.

ஆகவே "மோனமென்பது ஞானவரம்பு" என்ற சூத்திரத்துக்குப் பொருள் நன்கு விளங்கும். இதுவே சித்தாந்த முத்திநிலை. இதிற் சிவஞானத்தை ஞானம் என்றுணர்க. முப்பாழ் என்றதன் விளக்கம் தசகாரியம் உணர்ந்து ஞான நிட்டையும் முந்நிட்டையின் பயனும் உறுவார்க்குத் தெரிவது. பிராசாத யோகத்தில் விளங்கும் ஆறு சூனியம் வேறு, இது வேறு.

" என்வழி யின்றுகாறும் இருந்தருள் தன்னைப் போலத்
தன்வழி எற்றைஞான்றும் தங்கும்அந் நிலைமை தோன்றத்
தன்னையும் எனையும் தந்து தனதென தறமுப் பாழ்மேற்
பின்னிய முழுப்பா ழான பெருசுபே ரின்பம் போற்றி "

என்று தணிகைப் புராணம் கூறியவாற்ருல் ஓரளவு தெரியலாகும்.

சிவபோகத்தையும் ஆன்ம லாபத்தையும் ஒன்ருகக் கொள்ளல்வேண்டும். ஆன்மாவுக்கு லாபம் (-பேறு) சிவமே. சிவமே பேறு. பேறே சிவம். ஆன்மாவுக்கு லாபம் சிவமாகிய பேறேயாம். ஆதலாற்ருன் சைவ சித்தாந்த முத்தியில் ஒருபாதி பாசவீடு (துக்கநிவிர்த்தி, பந்தநிவிர்த்தி) மற்ருெரு பாதி சிவப்பேறு (சுகப்ராப்தி, மோக்ஷப்ராப்தி) ஆகும். சிவப்பேறும் சிவபோகமும் வேறல்ல. ஆன்மாவுக்குரிய வீடுபேறு இரண்டனுள் வீடு (முக்தி) பாசத்தை விடுவது. பேறு சிவத்தைப் பெறுவது. அவ்வாறு பாசம் விட்டுப் பெறும் பேருகிய சிவமும் பெறுவதாகிய ஆன்மாவும் அத்துவித சம்பந்தம் ஆகி வேறின்றி உடந்தையாய் உறும் பேரின்பம் 'பின்னிய முழுப் பாழான பெருகு பேரின்பம் போற்றி' என விளக்கப்பட்டது. இது முழுப்பாழ். இதற்கு முற்பட்ட முப்பாழும் யாவை?

"மருளின் நான்முதல் என்றலும் மன்னுயிர் அருள்கண்
டருளின் நான்முதல் என்றலும் அருள்முதல் என்றும்
தெருளி லாததில் அழுந்தலும் தீர்ந்தெமோ டறிவாய்
இருள்செய் கேவலம் போற்கலந் திருப்பதே முத்தி"

என்று திருவானைக்காப் புராணத்தில் ஞானேபதேசப் படலத்தில் (29) [1]பசுவுணர்வால் மயங்கித் தன்னைக் காணமாட்டாமையால் நானே முதல் என்று நிற்றல் மாயைப்பாழ். [2]அருளினலே அவ்வருளைக் கண்டு நானே சிவசமம் ஆனேன் என்று நிறறல் சீவப்பாழ். [3]அருளாகிய முதல் எக்காலும் முனைக்குமாறு தெரியாவண்ணம் அவ்வருளிலே அடங்குதல் அருட்பாழ். இம் முப்பாழுந் தீர்ந்து அதன்மேல் ஈறிலாத இன்பமே பெரும்பாழ்.

எனப்படும். அதனெடு ஏகமாய் அத்துவிதம் ஆவதே முடிவான சித்தாந்த முத்தி.

சுத்தம் அசுத்தம் சுத்தாசுத்தம் (- மிசிரம்) என்னும் மூவகையாம் ஒரு மாயா பிரபஞ்சத்தினின்றும் நீங்குங் கால், ஆன்மா சிவவியாபகத்தைத் தலைப்பட்டு முனைந்து அடங்குவதும் அருளில் தலைப்பட்டு ஐந்தொழில் (பஞ்சக் ருத்யம்) செய்யக் கருதித் துவள்வதும் அவ்வருளில் வியாப்பியமாய் அடங்குவதும் ஆகிய மூன்றும் மூன்று பாழாகும். இதனைப் பட்டினத்தார்,

" இப்பாய்க் கிடத்தி இயமன்உயிர் கொள்ளும்முன்னே
முப்பாழைப் போற்றி முயங்கிலையே நெஞ்சமே "

" முப்பாழும் பாழாய் முதற்பாழ் வெறும்பாழாய்
அப்பாழுக் கப்பால் நின்றுடுமதைப் போற்றுமல்
இப்பாழும் வாழ்வைநம்பி ஏற்றவர்க்கொன் றீயாமல்
துப்பாழாய் வந்தவினை சூழ்ந்தனையே நெஞ்சமே "

" முப்பாழுக்கு அப்பால் முதற்பாழ் முழுமுதலாய்
இப்போது வந்தான்காண் எனைவிழுங்கிக் கொண்டான்காண்"

" முப்பாழுக் கப்பால் முடிவிலாப் பாழிற்கலந்து "

என்றதும்,

" சுத்தவெறு வெளியாய்ப் பாழாய் வெறும்பாழிற்
கப்பால் உறுபொருளாய் நிற்கும் ஒருவன் "

என்றதும் காண்க. எல்லாவற்றினும் விளக்கமாக இலங்குவது திருவானைக்காப் புராணத்தில் ஞானுபதேசப் படலத்துப் பாடல்:

"அருளெலாம் உளத்தழுத்தினர் தெளிந்தனர் நிட்டை
மருளெலாந் தபமருவினர் மன்னுமுப் பாழும்
ஒருவிமேற் பெரும் பாழ்எனும் உலப்பில் ஆநந்தப்
பொருளொ டேகமாய்ப் பொருந்திடு முத்தராயிருந்தார் "

இதிற் கூறிய மாயைப்பாழ் சீவப்பாழ் அருட்பாழ் என்னும் முப்பாழையும் கடந்து, அதன்மேல் பெரும்பாழ் என்னும் நிரதிசயாநந்த சொரூபம் எனப்படும் பொருளொடு அநந்நியம் ("வேறின்மை") ஆகிக் கூடி யநுபவிக்கின்ற சுத்தாத்துவித முத்தியைத் தெளிய உணர்ந்து, அநுபவத்திற்கொண்டுய்தல் வேண்டும். பெரும்பாழ், முழுப்பாழ் என்று கூறப்படுவது ஆநந்தாதீதம் என்னும் பரமமுத்தி. ஆநந்தமாகிய அதீதம் என்று கொள்ளல் வேண்டும். ஆநந்தத்திற்கும் ஆதீதம் எனக் கொண்டார் பலர். அதன் பொருத்தம் எங்களுக்குத் தெரியாது.

இதுகாறும் உணர்த்தியது சித்தாந்த ஞான நெறியை. இச்சித்தாந்தத்தே இம்மையிலேயே ஜீவன் முத்தி சித்திக்கும். இதற்குச் சிவனது திருக்கடைக் கண்ணோக்கம் சிறப்பிற் கிடைக்க வேண்டும்.

அச்சிவனருளைப் பெற வேண்டில், நாம் நம் [1]உடலையும் [2]பொறிகளையும் [3]அகக்கருவி (அந்தக்கரணங்) களையும் தூய நிலையில் வைத்துக்கொண்டு [4]அறியாமையாகிய அழுக்கையும் போக்கிவிடல் வேண்டும்.

1. உடலைத் திருவருள் நெறியில் நிலைபெறச் செய்யும் தவம் 'சரியை' எனப்படும்.

2. பொறிகளை (இந்திரியங்களை)ப் பாழும் புலன் வழியாக மட்டும் வைத்துப் பிறப் பிறப்புக்களுட்பட்டு உயிர்க்குத் துன்பமே உண்டாகும் வழியின் நீங்கி இன்பம் உண்டாக்கும் திருவருள் நெறியில் ஒழுகும் தவம் 'கிரியை' எனப்படும்.

3. உட்கருவி (அந்தக் கரணங்)களை (மனம் புத்தி சித்தம் அகங்காரங்களை) ஆசை முதலிய

குற்றங்களின் நீக்கிச் சிவஞான ஜோதியில் நிலை பெறச் செய்யுந் தவம் 'யோகம்' எனப்படும்.

இத்தவம் மூன்றும் உபாயம், உண்மை என்று இருவகைப்படும். அவற்றுள் உண்மைத் தவமே 'இறப்பில் தவம்' (அழிவில்லாத சைவத் தவம்) எனப்படும்.

" இருவினை யொப்பில் இறப்புஇல் தவத்தால்
மருவுவனும் ஞானத்தை வந்து "

என்றது சிவஞானபோத வெண்பா. (சூ. 8. அதி. 1-2).

இறப்பில் தவம் ஆகிய உண்மைச் சரியை உண்மைக் கிரியை உண்மை யோகம் மூன்றும் கிடைத்தற்குச் சாதனங்களா யிருந்தவை உபாயச்சரியை, உபாயக் கிரியை, உபாய யோகம் என்னும் மூன்றும். அதனால் அம்மூன்றும் தவங்களே ஆயினும், ஞானத்தைக் கொடாமற் போலியாய்த் தவிர்தலும் உண்டு. அதனால் அவை இறப்பில்லாதவை அல்ல.

"மேற் சரியை கிரியா யோகங்களைச் செய்துழி நன்னெறியாகிய ஞானத்தைக் காட்டி யல்லது மோக்ஷத்தைக் கொடா ஆகலான் இவ்வான்மாக்களுக்கு முற்செய் தவத்தான் ஞானம் நிகழும்" என்னும் (சிவஞான போதவுரை) சிவாகம வாக்கியம் ஞானத்தைக் காட்டி மோக்ஷத்தைக் கொடுக்கும் அழிவில்லாத் தவங்கள் இவை என்று உணர்த்துவது அறிக.

4. ஞானம்: சரியை கிரியை யோகம் ஆகிய தவங்கள் மூன்றும் முறையே உடற்செயலும், பொறிகளின் றொழிற்பாடும், நினைதல் முதலிய தொழிலும் ஆகிய கிரியைகளை உடையன ஆகும். ஆயினும் அவை அறிதல் ஒப்புமையால் ஞானமே யாகும்.

சரியை

அகண்டாகார நித்திய வியாபக சச்சிதாநந்தப் பிழம்பாகிய சிவபிரான், உயிர்கள் படிமுறையால் உணர்ந்து உய்தற் பொருட்டுத் [1]தூலமாகவும் [2]சூக்கு மம் ஆகவும் [3]அதிசூக்குமம் ஆகவும் மூவடிவம் கொண் டருளினன். அவ்வடிவங்களின் வழிபடும் முறைமையை யும் வேதாகமங்களில் அவனல் வகுத்தருளிச் செய்யப் பட்டன. அவ்வடிவங்களில் வைத்துப் பக்குவ முறைமை யால் மேம்பட்டு நிகழும் நுண்ணுணர்வு இல்லாமையால் சகளமாகிய தூலவடிவம் மாத்திரம் பொருள் என்று அறிவது சரியையாளர்க்கு இயல்பு. இவ்வறிதல் ஞானம். காயத் தொழில் மாத்திரத்தால் வழிபடுவது உடற் கிரியை. இது இந்திரியக் கிரியை அன்று. அதனல், சரியையிற் கொள்ளப்பட்டது.

கிரியை

சரியையில் அடிப்பட்டுவர வரப் பக்குவம் விசேட மாக நிகழும். அப்பக்குவ விசேடம் நுண்ணுணர்வைத் தோற்றும். அவ்வுணர்வால், சகள நிட்களமாகிய சூக்கும வடிவமே பொருள். சகளவடிவம் அப்பொருளை வழிபடுதற்கு இடமாகிய திருமேனி என்று அறிவது ஞானம். இஞ்ஞானத்தால் புறத் தொழிலாலும் அகத் தொழிலாலும் சிவாகம விதிப்படி சிவவழிபாடு செய்வது கிரியை. இதிற் பொறிகளும் அந்தக் கரணங்களும் தொழிற்படும். படினும் காயத்தொழில் மாத்திரமாக இல்லாததாற் சரியை ஆகாதவாறு, மனத்தொழில் மாத்திரமாக இல்லாததால் யோகமும் ஆகாமல் அவ் விரண்டற்கும் இடைப்பட்டுக் கிரியை எனப்பட்டது. சரியை முதலிய நான்கிலும் அந்நான்கும் உள்ளன. உண்டேனும் சிறப்புக்கிரியை இதற்கே உரியது. அவ்

வுரிமைபற்றி இதைக் 'கிரியை' என்றது சிவாகமம். ஏனைய மூன்றும் இவ்வாறே கொள்ளப்படத் தக்கன.

யோகம்

அச்சரியை கிரியைகளில் அடிப்பட்டு வரவரப் பக்குவ விசேடம் உண்டாகும். அதனால் நுண்ணுணர்வு வளரும். அவ்வுணர்வால் நிட்களமாகிய அதிசூக்கும வடிவமே பொருள். சகளமும் சகள நிட்களமும் அதனை வழிபடுதற்கு இடமாகிய திருமேனி என்று அறிவது ஞானம். இஞ்ஞானத்தால் அகத்தொழில் மாத்திரத் தால் சிவாகம விதிப்படி வழிபடுவது யோகம்.

முன் 'அறிதல் ஒப்புமை' என்றது இவ்வகையிற் கொள்ளற்பாலது.

ஞானம்

அம்மூன்றும் இவ்வாறு முறையே அடிப்பட்டு வர வர நிகழும் பக்குவ முதிர்ச்சியாலே உள்ளவாறு உணர்வு விளங்கி, அகண்டாகார நித்ய வ்யாபக சச்சிதாநந்தப் பிழம்பே ஸ்வரூபம் (இயல்பு வடிவம் செயற்கையாக வந்த வடிவம் அன்று) ஆதலை உணர்வர். ஏனைச் சகளமும் சகள நிட்களமும், நிட்களமும் (மூன்றும்) அச் சொரூபத்தை (அவ்வடிவங்களில் வைத்து) வழிபடும் பொருட்டும் அவ்வழிபாட்டால் முன் உணர்ந்த அவ் வுணர்ச்சி திடப்படும் பொருட்டும் நம்பால் வைத்த பெருங்கருணையால் அப்பரமன் கொண்ட திருமேனிகள் ஆகும் என்று இவ்வாறு உணர்வது ஞானம்.

காயத்தொழில் மனத்தொழில் இரண்டையும் கை விட்டுக் [1]கேட்டல் [2]நினைத்தல் [3]தெளிதல் [4]தெளிந்த வண்ணம் உறுதியாய் நிற்றல் ஆகிய அறிதற் றொழிலால் மாத்திரம் வழிபடுவது ஞானம். ஞானமார்க்க பூஜை

இதன் முன்னிலை. இதுவரையிலும் கூறியவாற்றல் அறிதல் ஒப்புமையால் சரியை முதலிய நான்கும் ஞானமேயாம். ஆயினும்,

“ சரியைகிரி யாயோகந் தன்னல்மெய்ஞ் ஞானம்
பெருகியிடும் வாறுரைக்கிற் பேணி—ஒருவன்
விரும்பிவளர்க் கின்ற வியன்மரத்தில் உண்டாம்
அரும்புமலர் காய்கனிபோ லாம் ”

என்று அருளாசிரியரும்,

“ விரும்புஞ் சரியை முதல் மெய்ஞ்ஞானம் நான்கும்
அரும்புமலர் காய்கனிபோல் அன்றே பராபரமே ”

என்று தாயுமானரும் அருளியவாறு, அந்நான்கும் படிமுறையால் தம்முள் வேறுபடும். அவ்வேறுபாட்டால் முறையே ஒன்றற்கு ஒன்று விசேடம் உடையது. நாலாவதாகிய ஞானமே முடிவாகிய ஞானம் ஆகும். அச்சரியை முதலிய மூன்றினும் தோன்றும் ஞானங்களும் நாலாவதாகப் போற்றப்பெறும் சிறப்பு ஞானமும் வெவ்வேறே என்பதை உளங்கொள்ளல் வேண்டும்.

இந்நான்கிலும் அறிவு வரவர நுணுகிவரும். அறியாமையாகிய அழுக்கும் வரவரத் தேய்ந்துபோகும். அப்படி வளரும் ஞானத்தாலும் தேயும் அறியாமையாலும் முத்திப்பயன் கிடைக்கும். அம்முத்தியெல்லாம் ஒரு நிலையன அல்ல. சிவஞான லாபமும் மல க்ஷயமும் படிமுறையால் முன்னைவிடப் பின்னை ஏற்றம் உறும்.

சரியைக்குச் சாலோகம்முத்தி. கிரியைக்குச் சாமீபம் முத்தி. யோகத்திற்குச் சாரூபம்முத்தி. ஞானத்திற்குச் சாயுச்சியம் முத்தி. நான்கும் ‘முத்தி’ எனப்பட்டாலும், என்றும் மீளா ஆளாய்க் கொய்ம்மலர்ச் சேவடியிணையே குறுகும் சாயுச்சியமே முடிவாகிய முத்தி. மற்றையவை

தாழ்ந்த முத்திகளே. உபாயம் உண்மை யிருவகையிலும் சரியை முதலிய நான்கும் உள்ளன. உபாயச் சரியையிற் சரியை முதல் உபாய ஞானத்தின் ஞானம் முடிவாகிய பதினாறு வகையினின்றும் பல்வேறு வகைப்பட்டு விரியும் சிவபுண்ணியங்கள் எல்லாவற்றுக்கும் பத முத்தியே பயன்.

உண்மை ஞானத்திற் சரியை முதலிய மூவகையி னின்றும் பலவேறு வகைப்பட்டு விரியும் எல்லாச் சிவ புண்ணியங்களுக்கும் அபர முத்தியே பயன். இங்கு முத்தி வேறுபாடு கூறியதை நன்கு உணர்ந்தால் நம் சித்தாந்த சைவ முத்தித் திறத்துத் தனிச் சிறப்பு விளங்கும். பல்வகைப்படும் அவ்வப் புண்ணியங்களுக் குத் தக்கபடி முத்திகளும் பல வகைப்படும்.

1. உபாயச் சரியையிற் சரியை, உபாயச் சரியை யிற் கிரியை முதலிய பதினறுள்ளும் பலவகைப்பட்டு விரியும் எல்லாச் சிவபுண்ணியங்களுக்கும் பயன் சீகண்ட புவனத்தின் கீழ் உள்ள புவன பதிகளின் உலகத் தில் சாலோக முதலியவற்றைப் பெறுதலே யாகும். அவை பதமுந்திகளினும் தாழ்ந்தனவே. இவை சிவ லோகமல்ல. ‘சிவலோக பதவி அடைந்தார்’ என்று எழுதுவதிற் குறையில்லை.

2. உண்மைச் சரியையிற் சரியை முதல் உண்மை யோகத்தின் ஞானம் முடிவாகிய பன்னிரு வகையினின் றும் பல்வேறு வகைப்பட்டுவிரியும் எல்லாச் சிவபுண்ணி யங்களுக்கும் சுத்த வித்தைக்குக் கீழுள்ளனவும் சீகண்ட புவனமும் அதன் மேலுள்ளனவும் ஆகிய புவன பதிக ளுடைய சிவலோகத்துச் சாலோகம் முதலிய பதமுத்தி களைப் பெறுதலாம்.

3. உண்மை ஞானத்திற் சரியை முதலிய மூன்று வகையினின்றும் பல்வேறு வகைப்பட்டு விரியும் எல்லாச் சிவபுண்ணியங்களுக்கும் பயன் சுத்த வித்தை முதலிய அதிகார தத்துவம் போக தத்துவங்களில் வாழும் மந்திரர், மந்திர மகேசுரர் முதலோர் புவனத்துச் சாலோகம் முதலிய அபர முத்தியைப் பெறுதலாம்.

இனிப் பல்வேறு வகைப்பட்டு விரியும் ஞானத்தின் ஞானங்களுள்ளே முடிவாகிய ஞானமே சித்தாந்த சைவத்துக்கே உரிய சத்திய ஞானசேகரம். அதற்குப் பயன் பரமசாயுச்சியம் எனப்படும் பரம முத்தியே. முடிவாகிய ஞானம் அல்லாத மற்றைய ஞானங்களுக்கு இலய தத்துவத்திற் பலவேறுவகைப்பட்ட அபரமுத்தி பயனாகும். ஏனைய சாயுச்சியங்களை இங்கு விளக்கவில்லை.

(அ) சரியையிற் சரியை முதலிய நான்கு:

1. சரியையிற் சரியை: திருக்கோயில் அலகிடல் மெழுகல் முதலியன.

2. ஷை கிரியை: மகேசுர வடிவம் இருபத்தைந்துள்ளும் விநாயகர், முருகர் முதலிய வடிவங்களுள்ளும் ஏதேனும் ஒரு வடிவைப் பூஜை செய்தல்.

3. ஷை யோகம்: நெஞ்சில் உருத்திரக் கடவுளைத் தியானம் பண்ணுதல்.

4. ஷை ஞானம்: அத் தியாந பாவனுப்பியாச விசேடத்தால் ஓர் அநுபவ ஞானம் நிகழ்தல்.

(ஆ) கிரியையிற் சரியை முதலிய நான்கு:

5. கிரியையிற் சரியை: சிவபூஜைக்குத் தேவையான உபகரணங்களைச் செய்துகொள்ளல்.

6. ஷை கிரியை : சிவாகம விதிப்படி பூத சுத்தி முதலிய பஞ்ச சுத்திகளையும் முற்செய்து கொண்டு, சிவலிங்க ரூபத்தில் வழிபடல். (பஹிர் யாகம்).

7. ஷை யோகம் : உள்ளே இருதயத்தில் பூஜையும் நாபியில் தீ வளர்த்தலும் புருவ நடுவில் தியானமும் செய்யப்படும் அகவழிபாடு (அந்தர் யாகம்).

8. ஷை ஞானம் : அவ் வழிபாட்டுறைப்பின் கண் நிகழும் ஓர் அநுபவ ஞானம்.

'கிரியை என மருவும் அவை யாவும் ஞானம் கிடைத்தற்கு நிமித்தம்' என்றது சிவப்பிரகாசம்.

(இ) யோகத்திற் சரியை முதலிய நான்கு :

9. யோகத்திற் சரியை : [1]இயமம், [2]நியமம், [3] ஆசனம், [4]பிராணயாமம், ஆகிய நான்கும்.

10. ஷை கிரியை : [5]பிரத்தியாகாரமும் [6]தாரணையும் ஆகிய இரண்டும்.

11. ஷை யோகம் : [7]தியானம்.

12. ஷை ஞானம் : [8]சமாதி, *இங்கு இவ்வண்ணம் அஷ்டாங்க யோகம் அடங்கும் ஆறு அறிக.

(ஈ) ஞானத்திற் சரியை முதலிய நான்கு

13. ஞானத்திற் சரியை : பதிபசுபாச லக்ஷணங்களைக் குருமுகத்தினின்றும் உபதேசிக்கக் கேட்டல் (சிரவணம்).

---

*இங்ஙனம் என்று மருவியது இதுவே.

14. ஷை கிரியை : 'அவ்வினையாளரொடு பயில் வகை'யில் அந்த லக்ஷணங்களுக்கு அவ்யாப்தி, அதி வியாப்தி, அசம்பவம் என்னும் (திரிதோஷங்களும்-) முக்குற்றங்களும் இல்லாமல் ஆராய்தல் (- தோஷ நிவாரணசோதநம்) (சிந்தித்தல், நினைத்தல்) (மநநம்).

15. ஷை யோகம் : பதிபசுபாசம் ஆகிய முப் பொருளின் சொரூபத்தை நிச்சயித்துப் பாசம் தள்ளற்பாலது, பதி கொள்ளற்பாலது என்றும், பாசத்தின் நீங்கிப் பதியை வேறு இன்றிப் பெற்றுப் பிரிவு அற நிற்பாம் என்றும் தெளிதல் (நிதித்தியாசனம்).

16. ஞானத்தின் ஞானம் (இதுவும் பல வேறு வகைப்பட்டு நிகழும். இவற்றுள் முடிவான ஞானத் திற்கே பரமசாயுச்சியமாகிய பரமுத்தி பயன் என்று முற்குறித்ததாம்).

இம்முடிவான ஞானத்தை உணர முயல்வோர் (புலவரும் புலவரல்லாதாரும்) ஆகிய சைவர் எல்லாரும் இச் சைவ மார்க்கத் துறைகளையும் நெறிகளையும் சுருங்க அறிந்துகொள்ள விரும்பினால் திருச்செந்தூரகவலைத் தினந்தொறும் பாராயணம் பண்ணி வரல் வேண்டும். அதனால் இம்மை மறுமை வீடு மூன்றும் பெறும் வழியறி யும் நலம் ஏற்படும். வீடு வேண்டுவார்,

"சரியை கிரியை சார்ந்திடும் யோகம்
தெரிதரு ஞானமும் செறிந்து வாழ்குவரே."

இளமையில் அத் திருவருட் பிரபந்தத்தை நாள் தொறும் பாராயணஞ் செய்து பெற்ற பலனே நாம் இன்று இச்சமாஜத்தில் இருக்கச் செய்ததாகும். எல் லாரும் அப் பயனை அடைதல் வேண்டும்.

" எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறென் றறியேன் பராபரமே."

மேற்குறித்த முடிவான ஞானத்தின் எய்தும் நிட்டை யிற் பழகும் முறைகளை அறிவாரும் அறிவிப்பாரும் அருகிய இக்காலத்தில், நூல்களைக் கற்றுத் தமக்குத் தோன்றிய வாற்றை வெளியிட்டு வருகின்றனர். இதுவும் இல்லை யேல் 'சைவம்' எந்நிலையில் இந்நாட்டில் இருக்குமோ?

நூல்கள் செய்யும் துணையின் அளவை முதலில் உணர்தல் வேண்டும். '**நூலுணர்வுணரா நுண்ணியோன் காண்க**' '**நூலே நுழைவரியான்**' என்னுந் திருவாசகத்தை யாவரும் அறிந்திருக்கலாம். நூலால் ஞான நிட்டையும் பயனும் கிட்டுமா? கிட்டுமாயின் உபதேசமும் குருவும் ஏன்? இப்படிக் கேட்டலால் நூலாற் பயன் இல்லை என்று முடிவு செய்து கொள்ளலாகாது.

" வேதமெய்ந் நூல் சொன்னவனே சொற்கழிந்தவனே "

" சொற்பதங் கடந்த தொல்லோன் "

" சொல்லிறந்து நின்ற தொன்மை "

" பாதாளம் எழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்."

என்பன கருதுக.

" நூலால் நன்றா நினைமின்கள் நோய்கெட.....கடம்பந்துறை
மேலான் நாம் செய்த வல்வினை வீடுமே "

என்றருளிய திருநாவுக்கரசர் திருவாக்கும் ஆராயற் பாலது. வாச்சிய வாசக ஞானத்துக்கு எட்டாதது பதி.

அதனால் நூலுணர்வுணரா நுண்ணியோன் ஆவன். திருஞானசம்பந்தர்,

"நுண்ணறிவால் வழிபாடு செய்யுங் காலுடையான்"

என்றருளினர். இதிற்கூறிய நுண்ணறிவும் வழிபாடும் காலும் எத்தகையன என்றறிதல் அறிஞர் கடனாகும். இங்கே,

"சாத்திரத்தை ஓதினர்க்குச் சற்குருவின் றன்வசன
மாத்திரத்தே வாய்க்குநலம் வந்துறுமே—ஆர்த்தகடல்
தண்ணீர் குடித்தவர்க்குத் தாகம் தணிந்திடுமோ
தெண்ணீர்மை யாய் இதனைச் செப்பு."

"சாத்திரங்கள் ஓதித் தலைவனடி கூடாமல்
சாத்திரங்கள் இன்பம் தருமோதான்—சாத்திரங்கள்
கற்றறிந்து விட்டால் கதிஆகா தப்பொருளிற்
சற்றிருந்து பாராய் தரித்து"

"தமைத்தெரியும் அவ்வளவும் சாத்திரங்கள் ஓதி
அமைத்தபொருள் எல்லாம் அறிவார்—சமத்தனுக்கும்
வேண்டாம் அவத்தனுக்கும் வேண்டாமற் றுள்ளவர்க்கும்
வேண்டாம் எனக்களித்த வீண்"

என்றருளியதன் கருத்தை ஓர்ந்துகொள்க.

அவ்வாறு குருவும் குருபதேசமும் அருகிய இக்காலத்திலே, சித்தாந்த சைவத்தின் தனிச் சிறப்பை அறிந்துகொள்ள முயல்வதும், முயன்று அறிந்து முடிவான பயனை எய்துவதும் எவ்வாறு இயலும்? ஒருவாறும் இயலாது என்று வாளா இருத்தலும் தீது. அத்தீதுண்டாகாது தடுத்தற் பொருட்டு நூல்களைக் கற்றலும் கற்றார் சொல்லக் கேட்டலும் கேட்டவற்றை நினைத்தலும் நினைந்து உட்கருத்துக்களைத் தெளிதலும், தெளிந்தவாறு நின்று பழகுதலும் வேண்டும். கல்வி கேள்வி நினைவு தெளிவு நிலை என்னும் ஐந்தனுள், சமய சாத்திரங்கள் கேள்வி முதலிய நான்காலும் விளக்கம் பெற உதவு

வன. கற்றல் என்னுது 'ஓதல்' என்று வழங்குவதன் தாற்பரியம் தெரிந்துகொள்ளற் பாலது.

"ஞானநூல் தனைஓதல் ஓதுவித்தல்
நற்பொருளைக் கேட்பித்தல் தான்கேட்டல் நன்ருு
ஈனமிலாப் பொருளதனைச் சிந்தித்தல் ஐந்தும்
இறைவனடி அடைவிக்கும் எழில்ஞான பூசை"

என்னுந் தமிழ்ச் சிவாகமத்தில் உள்ள ஞான பூஜையுள் அடங்கும் ஓதலைக் கற்றலாகக் கருதிக்கொண்டு ஏனை நூல்களைப் போல ஞான நூல்களைக் கற்றல் சிறிதும் தகாது. 'ஓதல்' என்றதற்கு நம் பராமாசாரியர் சிவாக்கிர யோகிகள், "முன்னெடுபின் மலைவு அற ஆசாரியனிடத்திலே படித்தல்" எனப் பொருளுரைத்தருளினர்கள்.

ஓதுவித்தல் - தான்படித்தபடி ஒருவர்க்குப் படிப்பித்தல், இங்குப் படித்தலைக் கற்றல் என்று கொள்வார், 'கற்றல்' என்றதற்கு இக்காலத்தார் கருத்துக்குத் தக்க பொருள் கூறலாகாது. கற்றலும் ஓதலும் பொருளாலும் வேறுபடும். காலக் கருத்தாலும் வேறுபடும்.

புறங்கூறினன், புறங்கற்ருன், புறமோதினன் என்னும் மூன்றும் ஒன்ருமோ? காஞ்சிப் புராண வசனத்தையெழுதியவர் புறமோதிக் கொலைபயின்று என்றதன் பொருள் எழுதிய இடத்தில், புறங்கூறி என்ருர். அது 'மறைநான்கும் பயின்று' என்றதன் மறுதலை ஆமோ?

கேட்டல் -[1 பாசம் 2பசு 3பதி என்னும் முப்பொருள்களுள் பதி ஞானனந்த சொரூபி. ஆதலால் அந்நற்பொருளாகிய பதியை] மனம் முதலான கரணங்களை நீக்கிப் பாவிக்கும்படி ஆசாரியனிடத்திலே தான் கேட்டல் கேட்பித்தல் - அவ்வாறு தன் சீடனுக்குப்

போதித்தல். (ஈனம் இலாப் பொருளதனைச்) சிந்தித் தல் - [பாசம் ஜடம், மலம். பசு அம் மலசம்பந்தம் உடையது. பதி ஓர் இழுக்கும் இல்லாதது. இயல் பாகவே தூய்மை யுடையது. அழியாத இன்புருவம். அப்பதியை] ஆன்மாவிலே வேறற (அநந்நியம் ஆக)ப் பாவித்தல். அப்பாவனையால், கன்மவேள்வி, தவவேள்வி, ஜெபவேள்வி, தியாநவேள்வி ஆகிய நான்கு பூஜைகளி னும், ஓதல் முதலிய ஐந்துமாகிய ஞான பூஜையே மிக்க மேன்மையுடையது, இஞ்ஞான பூஜையே சிவசாயுச் சியத்தை அடைவிக்கும்.

இக்காலத்திலே சைவ சித்தாந்த ஞான சாத்திரங் களை ஓதி ஏன் சிவசாயுச்சியத்தைப் பெறலாகாது என்று வினவலாம். அவ் வினவுக்கு விடையிறுக்க முடியுமோ?

இங்கு ஞானபூஜை என்றது நூலுருவில் விளங்கும் சிவஞான பூஜையை. பாசஞானத்தையும் பசு ஞானத் தையும் பூஜை செய்யும் மதங்கள் முக்கூற்றுப் புறச்சம யங்களாக முதலிற் கூறப்பட்டவற்றுள் சாரும்.

அச்சிவஞானத்தால் தான் மோக்ஷம் பெறல்கூடும். கூடவே, "வீடு எய்த அறிந்தோர் எல்லாம் அரனை மேலான ஞானத்தால் அருச்சிப்பர் ஆயினர்.

இதுவரையில் ஞான பூஜையை அறிந்தோம். அந்த ஞான பூஜையால் வரும் உண்மை ஞானம் கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கிளத்தல் என்னும் அப்பி யாசமாகிய நான்கு திறத்தால் எய்தப்படும். அவற்றுள்,

1. கேட்டல் (- முதல் அப்பியாசம்) ஆசாரிய முகத்திலே நின்று முப்பொருளியல்புகளைக் கேட்டல்.

2. உடன் சிந்தித்தல் - அவ்வினையாளரொடு பயிலுதல். முப்பொருளிலக்கணங்களை (அவ்வியாப்தி

முதலிய முக்குற்றங்களும் இல்லாமை)த் தெரிய ஆராய்தல். (கேட்டலுடன் சிந்தித்தல் என்றே இவர்களல்லாத பிறர் உரைத்தனர்).

3. தெளிதல் - முப்பொருள்களின் சொரூபத்தை நிச்சயித்துணர்ந்து, பதியொடு பிரிவற நிற்கத் துணிதல்.

4. நிட்டை கூடுதல் - பதியுடன் வேறற நின்று பேரின்ப வளர்ச்சியைப் பெறுதல்.

இவ்வாறு அப்பியாசம் நான்கும் அவற்றால் எய்தும் ஞான பேதம் நான்கும் கூறப்பட்டன. முடிவிற் குறித்த நிட்டையை மேவினோர்கள் வீட்டை அடைந்திடுவார்கள். இந்நிட்டை ஞானநிட்டை எனப்படும். இதனால் அடையப்படும் வீடு நாதன்தாள் அடைவே.

" தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே "

என்னும் தமிழ்மறை ஈண்டு நோக்கத்தக்கது.

ஞான பூஜை; உண்மை ஞானம்; ஞான நிட்டை மூன்றையும் விளங்க வுணர்தல் வேண்டும். நால்வகை உண்மை ஞானப்பியாசம் கேட்டல் முதலிய நான்குமாம். அவற்றின் முடிவான நிட்டையால் வரும் பயனே முடிவான சிவ ஞானத்தால் எய்தும் பரமமுத்தி. குருவால் ஞானநிட்டை அடைந்து நாதன்தாள் அடைவர் என்றது சிவாகமம்.

'வீட்டை அடைந்திடுவர் நிட்டை மேவினோர்கள் என்றும் நிட்டை மேவாது தப்பினவராய்ப் புண்ணிய பதவிநாதராய் இன்பம் இனிது நுகர்ந்து, அரனருளால், மண்ணில், வந்து நல்ல குலத்திற் பிறந்து குருவால் ஞானநிட்டை அடைந்து நாதன்தாள் அடைவர் என்றும் குறித்த இருவேறு திறத்தாரையும் தெரிந்துகொள்ளல்

வேண்டும். நாதன்தாள் அடைதல் - பரமானந்த சாயுச்சியம்.

மேவாது தப்புதல்-கேட்டல், சிந்தித்தல், தெளிதல் என்னும் மூன்று அப்பியாசம் மட்டும் உற்று நிட்டையை உருதொழிதல். நிட்டையை மேவாமையால் மீண்டும் பிறக்க நேர்கின்றது. பிறந்தாலும் விட்ட குறை தொட்ட குறை என்பவற்றுள், இது விட்ட குறையினை மீண்டும் தொட்டே முடிவான குறையை நிறை செய்துகொள்ளும் பரமநிட்டை. முற்பிறப்பில் கேட்டல் முதலிய மூன்றும் அப்பியசித்து நிட்டை மேவும் அப்பியாசம் மட்டும் விட்டுப்போனாலும் பிறப்பு நிச்சயமாக உண்டு என்று உணர்ந்துகொள்ளல் வேண்டும்.

மண் முதல் புத்தி தத்துவம் வரையும் கடந்து, அவற்றின் மேலான பிரகிருதி மண்டலத்திலே சிவலோகத்திலே சாலோக சாமீப சாரூப பதங்களை 'மேலாய பதங்கள்' என்றும், அப்பதங்களை அடைவிக்கும் புண்ணியங்களைச் செய்தவரை '(மேலாய பதங்கட்கு) ஈட்டிய புண்ணியநாதர்' என்றும் அருணந்தி தேவ நாயனார் அறிவித்தருளினார்.

இதுவரையிலும் சொல்லியது (ஞானநெறியில்) முடிவான ஞான நிட்டையுடையோரைக் குறித்தது.

அந்த ஞான நெறிக்கே வாராத யோகியர், கிரியையாளர், சரியையாளர் என்னும் முத்திறத்தார்க்கும் பத முத்தியே வீடுபேறு ஆகும். அவர்கள் உலகமெல்லாம் (சர்வசங்காரத்தில்) ஒடுங்கும்போது சிவதரிசனம் எய்தப்பெற்றால் அந்நாதன் தாள் அடைவர். அது பெருவீடில், மீண்டும் பிறந்து மேற்குறித்த ஞான நெறியை அடைந்தே சிவனை அடைவர்.

இதுவே 'நல்ல சிவமுத்தி' எனப் போற்றப்பெறுவது. முற்கூறிய தெளிதலோடு நின்றவராயினும் இறப்பில் தவங்களை (சரியை, கிரியை யோகங்களை)ச் செய்து அவ் வளவில் நின்றவர்களும் மீண்டும் பிறந்து தானே ஆதல் வேண்டும்? அவ்விரு திறத்தார்களும் பிறப்படைவார்க ளாயின் அவர்களுக்குள் தாரதம்மியம் என்ன என்று கேட்கலாம். அத் தாரதம்மியம் அறியத்தக்கது.

1. ஞானிகள் நிட்டை மேவாமல் கேட்டல் சிந்தித்தல் தெளிதல் மட்டும் உடையவர்களாய்ச் சிவதரிசனம் பெருதவர்கள்.

2. ஞான நிட்டையாளர்கள் (கேட்டல் முதலிய நான்கு அப்பியாசமும் உற்று அவற்றின் பயனுகிய (ஞானத்தால் சிவனடி யெய்தியவர்கள். 'நல்ல சிவமுத்தி' இதுவே, (சித்தியார். 11 : - 6)

என்று ஞானநெறியில் இருவகையோர்களைக் கூறி அவர் களுள் (முதலிற் குறித்த) நிட்டையுருது தப்பிய ஞானி களுக்கும் பிறப்புண்டு. பிறந்தாலும் முன்விட்ட தெளி தலுக்கு அடுத்த நிட்டையை ஆசாரியனுல் அறிவித் தருளப் பெற்று. அந்த ஞான நிட்டையை உற்று நாதன் தாள் அடைவார்கள்.

இரண்டாவதிற் குறித்தவர்களுக்குப் பிறப்பில்லை. இவ்விரண்டும் 'நல்ல சிவஞானம்' எனப்பெறும் ஞான நெறியில் உற்ற பேதம் இது.

(அ) இனிச் சிவசரியை, சிவகிரியை, சிவயோகம் என்ற மூன்றனுள்ளும் நின்று முறையே மேன்மேலுயர்ந்து வருவோர்களை "ஈசன் யோகக்கிரியா சரியையினில் நின்றோர்" என்றருளினர் அருணந்தி தேவநாயனர். இவற்றுள் சரியை கிரியை இரண்டும் 'நல்ல சிவதன்மம்.'

(ஆ) யோகம் நல்ல சிவயோகம். இம் முத்திறத்தாரும் ஞானநெறியே எய்தாதோர் ஆவர். ஆதலின் இவர்கள் மீண்டும் பிறந்து அடைவது ஞானநெறியே அன்றி ஞானநிட்டை அன்று. அவர்கட்குப் பதமுத்தியும் அதற்குரிய புண்ணிய நாதராதலும் இல்லை.

இனிச் சரியை கிரியை யோகம் என்னும் இறப்பில் தவங்களைச் செய்யாமல், தானம், யாகம், தீர்த்தஸ்நானம், ஆச்சிரமநிலை, தவங்கள், சாந்தி, விரதம், கர்மயோகம் முதலியவற்றைச் செய்து வருவோர்க்குச் சுகமே அனுபவிக்கும் தேவலோகமே கிடைக்கும். இது பத முத்தியும் அன்று, வேறு எம்முத்தியும் அன்று. சுவர்க்கம் பெறுவதே யாகும். "ஈனம் இலாச் சுவர்க்கம் பெற்று இமைப்பளவில் மீள்வர்" என்றது அச் சுவர்க்க லாபம் நீடித்ததன்று என்று அதன் இழிவை உணர்த்திற்று. உலக வழக்கிலும் இறந்தவர்களைச் சிவலோகம் எய்தினர், வைகுந்த பதவி எய்தினர் என்னும் வழக்கு உண்டே அன்றிச் சுவர்க்கம் எய்தினர் என்னும் வழக்கு இல்லை. சுவர்க்கம் எய்தலாம். சுவர்க்காதிபத்தியம் எய்தாமை அறிக. அதிபதியாகாது அவ்வுலகம் மட்டும் அடைவது ஒவ்வொரு திறத்திலும் அதனதன் உலகம் அடைவது (சாலோகம்) என்ற அளவில் அடங்கும்.

கேட்டல் முதலிய மூன்றாலே உயிருள் மறைந்து இருந்த சிவனிச்சையும் சிவன் ஞானமும் சிவன் கிரியையும், அவ்வுயிரின் இச்சையிலும் ஞானத்திலும் கிரியையிலும் வெளிப்பட்டு விளங்கும். உயிரினுடைய இச்சா ஞானக் கிரியைகளை அடக்கிச் சிவனுடைய இச்சா ஞானக் கிரியைகளாய் நிற்கும். இந்நிலையைப் பெற்றவர்கள் ஜீவன் முக்தர்கள் எனப் பெறுவார்கள். இந்நிலையிற் பசு கரணம் சிவகரணமாகப் பெறுதல் வேண்டும்.

ஆன்ம இச்சை சிவனிச்சை யாயும்
ஆன்ம ஞானம் சிவஞானம் ஆயும்
ஆன்ம கிரியை சிவகிரியை யாயும்

நிற்கப்பெற்ற நிலேயே ஜீவன் முக்தி நிலே. தேகம் நீங்கிய (விதேக) நிலேயில் இதுவே பரம சாயுச்சிய முக்தி ஆவது. ஜீவன் முக்தி - கண்ணுதல் நிறைவிற் கலந்திருப்பது. விதேக முக்தி - அரன்போல் எங்குமாய் நிற்றல்.

அங்கனம் சிவஞானமும் சிவச் செயலுமாகப் பெற்ற காரணத்தால் ஜீவந் முக்தர்களே "சிவஞானச் செயலுடையோர்" என்றது சிவஞான சித்தி. 'சிவஞானம்' என்றது ஆன்ம ஞானத்தின் இயைபு நீக்கியதால் பிறிதினியைபு நீக்கிய அடை சொண்டது.

" நல்லசிவ தன்மத்தால் நல்லசிவ யோகத்தால்
நல்லசிவ ஞானத்தால் நானழியும் "

என்னுமிடத்தில் இயைபின்மை மாத்திரை நீக்கிய அடைகொண்டவாறு காண்க. இதில் 'நான்' என்றது ஆன்மஞான நிகழ்ச்சி. அதை விலக்க வந்த அடையன்று.

அச் சிவ ஞானமே பரமமுத்தி (நல்ல சிவமுத்தி) யைக் கொடுக்கும் பரமஞானம் ஆதலின், "இறைவனடி ஞானமே ஞானம்" என்ருர்.

சிவன் கருணேயாலே குருமூர்த்தியை அதிட்டித்து வந்து பக்குவம் பெற்ற ஆன்மாவிடத்தில் சந்நிதானம் பண்ணச் சிவஞானம் ஆன்மாவில் அபிவியக்தியாம்.

சூரியன் சூரிய காந்தத்தினிடத்தில் சந்நிதானம் பண்ண நெருப்பு உண்டாவது அதற்கு உவமை.

ஞானசாதகன் ஞானசித்தன் என்று இருதிறத்தோர் உளர். சென்றவிடத்தாற் செலவிடாது தீது ஒருவிக் கரணங்களை அடக்கி நன்றாய சிவத்தில் நிற்கப் பயில்பவன் ஞான சாதகன்.

ஞானசித்தன் எல்லாம் சிவம் என்ன நிற்கும் எல்லாப் பொருளையும் சிவமாகக் காண்பவனும் கரணங்களைச் சிவகரணங்களாகத் துன்னியவனும் ஆவன். ஆதலின், கரணங்களை அடக்க வேண்டுமவன் அல்லன்

சுத்தமாயை முதலிய மாயைகளின் காரியங்களுடனே கூடியறியும் அறிவாலும் (பாசஞானத்தாலும்) அவற்றை நீங்கிய உயிரறிவாலும் (பசுஞானத்தாலும்) காண்டற்கு அரிய கடவுளை அக்கடவுளது ஞானத்தால் காண்டல் வேண்டும். இதை "அவனருளாலே அவன் தாள் வணங்கி" என்றும், "அவனருளே கண்ணாகக் காண்" என்றும் திருமுறை யுணர்த்தியதறிக.

இச்சித்தாந்த சமயத்தின் முத்தி நிலையைத் தெளிய முயல்வார் சிவஞான மாபாடியத்திலே பதினொன்றாவது சூத்திரத்தின் முதலதிகரணத்தில் விளங்க உணர்ந்து கொள்ளலாம். அதற்கு அடியாக உள்ளது பத்தாவது சூத்திரப் பொருள் விரிவுரை.

எவ்வாற்றானும் ஏகனாகி யிறைபணி நிற்பாரே சித்தாந்த முத்தியாகிய சுத்தாத்துவித நிலையைப் பெற்றுய்வர் என்பது முக்காலும் உண்மையாம்.

பக்கம் பெருகுமன்றஞ்சியும் பயனின்றென அறிந்தும் இவ் வுரைச் சுருக்கம் முடிவிலெழுதப் பட்டிலது.

'சித்தாந்தம்' (தமிழ்), 'சைவ சித்தாந்தா" (ஆங்கிலம்) ஆகிய இரு சஞ்சிகையும் சைவத்தைப் பரவச்

செய்து வருதலின் அன்பர்கள் அவற்றை வாங்கிப் படித்துப் பயன் எய்துவார்களாக.

“ சைவத்தின் மேற்சமயம் வேறிலை யதிற் சார்சிவமாந்
தெய்வத்தின் மேற்றெய்வம் இல்லெனும் நான்மறைச்
[செம்பொருள்வாய்
மைவைத்த சீர்த்திருத் தேவார முந்திரு வாசகமும்
உய்வைத் தரச்செய்த நால்வர்பொற் றாள்எம் உயிர்த்துணையே”

ஞானப்பிரகாச குரு நல்லடி வெல்க!

திருச்சிற்றம்பலம்

“ வாழ்க அந்தணர் வானவர் ஆனினம் ;
வீழ்க தண்புனல் ; வேந்தனும் ஓங்குக ;
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க ; வையகமும் துயர் தீர்கவே.”

திருச்சிற்றம்பலம்

முருகன் அச்சகம், இராயப்பேட்டை, சென்னை-14

'SAIVA SIDDHANTA'

A HIGH CLASS ENGLISH QUARTERLY JOURNAL

DEVOTED TO

Philosophy, Religion & Culture

Run by

Saiva Siddhantha Maha Samajam

12, East Mada Street, MYLAPORE, MADRAS - 4.

Annual Subscription Rs. 5/- only.

PLEASE SUBSCRIBE AND ENCOURAGE.